வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 19.04.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 110 பக்கங்கள் : 12

# இறையாண்மை பத்திர மறுசீரமைப்பு; மே மாதத்துக்குள் ஒப்பந்தம் சாத்தியம்!

## பேச்சுக்கு ஐ. எம். எவ்வும் ஒத்துழைப்பு

கொழும்பு, ஏப்ரல் 19

**இலங்கையின் 12500 மில்லியன் அமெரிக்க டொலர் (12.5 பில்லியன்) பெறுமதியான இறையாண்மை பத்திரங்களை மே மாத நடுப்பகுதியில் மறுசீரமைப்பதற்கான இயலுமை கிடைக்கும் என்று இறையாண்மை பத்திர உரிமையாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ராண்டர்ட் சார்ட்டட் (Standard Chartered) ஆய்வு நிறுவனத்தை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இதனிடையே, இலங்கை மற்றும் இறையாண்மை பத்திர உரிமையாளர்களுக்கு இடையிலான பேச்சுக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்.) தெரிவித்துள்ளது. இரு தரப்பினருக்கும் இடையில் கொள்கையளவிலான இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர் உத்தியோகபூர்வ மதிப்பீடு முன்வைக்கப்படும் என்றும் ஐ. எம். எவ்வை ஆதாரம் காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

12500 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இறையாண்மை பத்திரங்களை மறுசீரமைப்பதற்கு இது வரை இறுதி இணக்கப்பாடு எட்டப்படவில்லை 11

# சு. கவின் தலைவராக மைத்திரி தொடர்வதற்கான தடை நீடிப்பு

கொழும்பு, ஏப். 19

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயல்படுவதைத் தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசாரணைகள் நடைபெற்றன. இந்த நிலையில், மைத்திரிபால சிறிசேன தலைவராகத் தொடர்வதற்கான தடை எதிர்வரும் மே 09 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்வைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# அன்னை பூபதி நினைவுதினம் மட்டக்களப்பு, நல்லூரில் இன்று!

## கிளிநொச்சியில் அடையாள உண்ணாவிரதம்

மட்டக்களப்பு, ஏப். 17

அன்னை பூபதியின் 36ஆவது ஆண்டு நினைவுதினமான இன்று மட்டக்களப்பு, நல்லூரில் பிரதான நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கிளிநொச்சியில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது. தவிர, வடக்கு, கிழக்கின் பல்வேறு இடங்களிலும் புலம்பெயர் நாடுகளிலும் அன்னை பூபதி நினைவேந்தல் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பில்...

அன்னை பூபதி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த மாமாங்கேஸ்வரம் பிள்ளையார் 11

## இராணுவம், பொலிஸாரை மீறி

# யாழிலிருந்து திருகோணமலைக்கு சுண்ணக் கற்கள் செல்வது எப்படி?

## சிறீதரன் எம். பி. கேள்வி

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாணத்திலிருந்து நள்ளிரவு வேளைகளில் சுண்ணக் கற்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டு திருகோணமலைக்கு கொண்டு செல்லப்படுகின்றன என்று மக்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர். அந்த இடங்களை பார்வையிட்டபோது 20 முதல் 25 அடிவரை நிலம் அகழப்பட்டிருக்கிறது.

இவ்வாறு அகழப்பட்ட சுண்ணக்கற்கள் பிறிதோர் இடத்துக்குக் கொண்டு சென்று சேர்த்த 11

# பாடசாலை நேரத்தில் கனரக வாகனங்கள் பயணிக்கத் தடை!

## யாழ். ஒருங்கிணைப்பு கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் ஆரம்பமாகும் மற்றும் நிறைவடையும் நேரத்தில் பாடசாலை சூழலில் கனரக வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

பிரதான வீதிகளில் பாடசாலை நேரங்களில் குறித்த கனரக வாகனங்கள் வேகமாகவும் வீதி அபி விருத்திச் சட்ட விதிமுறைகளை கருத்தில் கொள்ளா மலும் செல்வதால் 11

# விஷ கடியால் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 19

விஷக் கடியால் பாதிக்கப்பட்டவர் பாரம்பரிய முறையில் பார்வை பார்த்து விட்டு வீட்டில் இருந்ததால் உடல் நிலை மோசமானது. இதனையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 52 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த நபர் காதுக்குக் கீழே விஷ பூச்சி கடித்ததும் பாரம்பரிய முறையில் பார்வை பார்த்து விட்டு வீட்டில் இருந்து விட்டார். இந்நிலையில், 11

# குழாய்க் கிணறால் ஏற்படும் பாதிப்பு குறித்து ஆராய முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாணத்தில் குழாய்க் கிணறுகளை அமைப்பதால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் ஆய்வு மேற்கொண்டு, அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடந்த யாழ். ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கூட்டத்தில், யாழ்ப்பாணத்தில் அனுமதியற்ற முறையில் அதிகளவான குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன என்றும் இதனால், நிலத்தடி நீர் வளம் பாதிக்கப்படுகின்றது எனவும் 11

# தமிழ் அரசு மத்திய குழு இன்று கூடுகின்றது

வவுனியா, ஏப். 19

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

கட்சி முகங்கொடுத்துள்ள வழக்குகள், ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக இதில் ஆராயப்படவுள்ளது.

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் 11

# ஈஸ்டர் தாக்குதல் விடயத்தில் கோட்டாபய ஏமாற்றிவிட்டார்!

## கர்தினால் மல்கம் ரஞ்சித் 10

# இந்திய பொதுத் தேர்தல் இன்று ஆரம்பமாகிறது!

புதுடில்லி, ஏப். 19

உலகின் ஜனநாயக திருவிழா என்று வர்ணிக்கப்படும் இந்திய பாராளுமன்றத் தேர்தல் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்களில் நடைபெறவுள்ள இந்தத் தேர்தல் இன்று முதல் ஜூன் முதலாம் திகதி வரை 7 கட்டங்களாக நடைபெறவுள்ளது. வாக்கு எண்ணும் பணி எதிர்வரும் ஜூன் 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு அன்றைய தினமே முடிவுகள் அறிவிக் கப்படும்.

இன்று நடக்கும் முதல் கட்டத் தேர்தல் 17 மாநிலங்கள் 4 யூனியன் பிரதேசங்களில் 102 தொகுதிகளில் நடைபெறவுள்ளது. இதில், 11

# புங்குடுதீவில் எலும்புக்கூடு மீட்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 19

புங்குடுதீவில் மனித எலும்புக்கூட்டின் எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்திலுள்ள சிவன் கோயில் புனர்நிர்மாண பணிக்காக நிலத்தைத் தோண்டிய போதே 11

# ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகளுக்கு எமது ஆட்சியில் தண்டனை நிச்சயம்!

## தேசிய மக்கள் சக்தி பேராயரிடம் உறுதி

கொழும்பு, ஏப். 19

"ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் - தாக்குதலுடன் தொடர்புடைய அனைவருக்கும் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றுக்கொடுக்கப் படும்" - என்று பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு தேசிய மக்கள் சக்தி வாக்குறுதி அளித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள் நேற்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை அவரின் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட சட்டத்தரணி சுனில் வட்டகல,

"ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்று எதிர்வரும் 21ஆம் திகதியுடன் (நாளை மறுதினம்) 5 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இதில், 270இற்கும் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

ஈழத்தமிழர் அரசியலை "வடிவேலு பாணி" நகைச்சுவையாக்குவதில் சிலர் திட்டமிட்டு பணியாற்றுகின்றனரோ என்று எண்ண வேண்டியிருக்கின்றது.

அந்தக் காலத்தில், நமது வீடுகளில் எந்த விசேஷம் என்றாலும் வீட்டுக்கு முன்னே பந்தல் போட்டு கொண்டாடுவோம். பெரும்பாலும் கொண்டாட்டங்களில் சைவ உணவுகளே பரிமாறப்படும். வீட்டுக்கு முன்னால் போடப்பட்ட பந்தலில் பனையோலை பாய் விரித்து வட்டமாகவோ அல்லது செவ்வக வடிவிலோ அமர வைத்து வாழை இலையில் உணவு பரிமாறுவார்கள். அப்போதெல்லாம் உருளைக்கிழங்கு கறிதான் விசேஷ கறியாக இருக்கும். சொல்லப்போனால், அதுதான் இறைச்சிக்கறி. பந்தியில் அமர்ந்திருக்கின்ற ஒருவர், தனக்கு கிழங்குக்கறி தேவையெனில், அங்கே உணவு பரிமாறிக் கொண்டிருக்கின்றவரைப் பார்த்துத் தனக்கு அருகில் அமர்ந்திருக்கின்றவர் இலையைக் காட்டி "இவருக்குக் கிழங்கு கறி போடுங்கள்" என்பார். அப்படியெனில் என்ன நடக்கும், அவருக்குப் போடுகின்றவர் அருகில் இருக்கும் இவரின் இலையிலும் அதனைப் போட்டுவிட்டுப் போவார். இந்தச் சம்பவம்தான் அந்தச் செய்தியைப் பாத்தபோது ஞாபகத்துக்கு வந்தது.

நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் அடிக்கடி கருத்துச் சொல்லும் ஒரு தலைவர் வேட்பாளராவதற்கு இவர்தான் தகுதியானவர் என்கிறார். கூடவே, தனக்கு இருக்கும் அந்த மூன்று மொழியும் தெரிந்த தகுதியை சுட்டிக்காட்டி வேட்பாளராகத் தெரிவு செய்யப்படுபவருக்கு மூன்று மொழிகளும் தெரிந்திருக்கவேண்டும் என்றும் கூறிவருகிறார். தமிழ் பொது வேட்பாளருக்கு மூன்று மொழிகளும் தெரிந்திருக்க வேண்டும் என்பது எதற்காக என்பது தெரியவில்லை. முதலில் இந்த விடயத்தில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிக்கவேண்டும். "அதுவே முடிந்த முடிவு, எல்லோருமாக அந்த விடயம் வெற்றிபெற உழைப்போம் என்ற உறுதி பூணவேண்டும்". அதற்கு பின்னரே யார் வேட்பாளர் என்பது பற்றிப் பேசவேண்டும். அப்படியல்லாமல் அவசரமாக யார் வேட்பாளராகலாம் என்பதும் அதிலும் சிலர் பெயரைச் சொல்லி நகைச்சுவை விடுவதும் இப்போது அவசியமானதா என்பது பற்றி யோசிக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பு ஆளாளுக்கு இது பற்றி கதைத்துக் கொண்டிருக்க தெற்கிலோ ஊடகங்கள் ஒவ்வொன்றும் தத்தமக்கு விருப்பமானவாறு செய்தி வெளியிட்டு வருகின்றன.

நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு வடக்கு அரசியல் பற்றிப் பேசிய அல்லது விபரங்களைக் கேட்ட ஒரு சிங்கள நண்பர், கேட்டார்: "அவர் தானாமே தமிழ் வேட்பாளர். அவர் தானே போட்டியிட விருப்பதாகவும் ஆனால், தமது மக்களை இரண்டாவது விருப்பு வாக்கை சஜித்துக்குப் போடுமாறு பிரசாரம் செய்வதாகவும் சஜித்துக்கு உறுதியளித்திருக்கிறாராமே" என்றார். அவர் சொல்லிய அந்த "அவரின்" பெயரை மேலே தவிர்த்திருக்கிறேன். காரணம் அவர் அவ்வாறு போட்டியிடப் போவதில்லை என்பதை உறுதியாக சொல்ல முடியும் என்பதால்.

இதை ஏன் இங்கே எழுத வேண்டி வந்தது என்றால், இப்போது தெற்கில் அரசியல் உலகில் அதிகம் பேசப்படுகின்ற விடயமாக இந்த தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் அமைந்திருக்கின்றது என்பதால்தான். சில முக்கிய தலைவர்கள் - மக்கள் பிரதிநிதிகள் இப்போது அது பற்றி பேசுவதால், தமிழர்கள் இந்த விடயத்தில் ஒன்றுபட்டு வருகின்றனர் என்று தெற்கில் பரவலாகப் பேசப்படுவதும் அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

தெற்கு ஊடகம் ஒன்றில் இந்த விவகாரத்தை செய்தியாக்கியிருந்தார்கள். அதில் பொதுவேட்பாளர் என்ற கருத்துக்கு ஆதரவாக இருப்பவர்கள் யார் யார், அதனை எதிர்ப்பவர்கள் யார் யார் என்பது பற்றிய தமது பார்வையை செய்தியாக்கியிருந்தார்கள். அதில் நமது கவனத்தைப் பெற்றது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அதற்கு எதிராகக் கருத்துச் சொல்லியிருக்கிறார் என்றார்கள். சம்பந்தன் அவ்வாறு சொன்னாரா? அல்லது அவர் சொல்லக்கூடிய நிலையில்- கருத்துச் சொல்லக்கூடிய நிலையில் - இருக்கிறாரா என்பது தெரியவில்லை. ஆனாலும் ஊடகங்கள் அவர் அதற்கு எதி ரான நிலைப்பட்டில் இருக்கிறார் என்று கூறியுள்ளது பற்றி அந்த சிங்கள ஊடகம் தனது பார் வையை சொலுத்திய அதே வேளை, தற்போதைய தமிழர் தலைவரான அவர் (மற்றுமொரு தலைவரை குறித்து) அதற்கு ஆதரவாக இருக்கிறார் என்றும் அதனால் பொது வேட்பாளர் களம் இறங்குவது பெரும்பாலும் உறுதியாகியிருக்கின்றது என்றும் தமது செய்தியில் தெரிவித்திருந்தது.

பொது வேட்பாளர் என்ற எண்ணக்கருவை தமிழ் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள் எல்லாம் ஒன்றிணைந்து செய்து முடிக்கின்றனவோ இல்லையோ, இப்போது தெற்கின் பார்வை வடக்கை நோக்கி திரும்பியிருப்பது நல்ல அறிகுறிதான்.!

**- ஊர்க்குருவி.**

# தமிழின அழிப்பு நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 19

இலங்கையின் கட்டமைப்பான இனவழிப்பும் தமிழ் மக்களின் இன சுத்திகரிப்பும் "Stru ctural Genocide and Ethnic Cleansing of Tamils in Sri Lanka" நூல் வெளியீடு நாளை 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நூலானாது தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சியினூடாக சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இல. 232, கோவில் வீதி நல்லூரில் அமைந்துள்ள தமிழ் மக்கள் கூட்டணி காரியாலயத்தில் வெளியிடப்படவுள்ளது. இவ்வெளியீட்டு நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர், நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

# காணி உறுதிப்பத்திரங்களை கைமாற்றுதல் இடைநிறுத்தம்

## வடக்கு ஆளுநர் நடவடிக்கை



யாழ்ப்பாணம்,ஏப். 19

வடக்கு மாகாணத்தில் காணி உறுதிப் பத்திரங்களை கைமாற்றும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள தாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கல், மீள் குடியேற்றம், புதிய வீட்டுத்திட்டம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இங்கு ஆராயப்பட்டன.

இந்த வருட இறுதிக்குள் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள பணிப்புரைக்கு அமைய, மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஆளுநர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் 1500 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். அவர்களை சொந்த இடம்களில் மீள்குடியேற்றுவது தொடர்பில் விசேட கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

அத்துடன், ஏற்கனவே மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வீடுகளுக்கான மின்சார விநியோகம் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்குமாறும் துறைசார் அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தினார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் காணி உறுதிப் பத்திரங்களை கைமாற்றும் செயற்பாடுகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன. "உரித்து" காணி உறுதிகளை வழங்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்காக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதற்கமைய மே மாத இறுதிக்குள் வடக்கு மாகாணத்தில் 60 ஆயிரம் பேருக்கான காணி உறுதிப் பத்திரங்கள் கையளிக்கப்படவுள்ளன.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வீட்டுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் திட்டமிடல்கள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. இந்தத் திட்டத்தில் நெடுந்தீவு மக்களுக்கான 76 வீடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன - என்றார் . (எ)

# ரஷ்ய-உக்ரைன் போருக்கு இலங்கையரை சட்டவிரோதமாக அனுப்பிய இருவர் கைது

கொழும்பு, ஏப். 19

ரஷ்யா - உக்ரைன் போருக்கு இலங்கையர்களை சட்டவிரோதமாக அனுப்பிய குற்றச்சாட்டில் இரண்டு பேர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி ஒரு வரும் உள்ளடங்குவதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

வாரியபொல பகுதியைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஒருவரே இவ்வாறு கைதாகியுள்ளார்.

இந்த சம்பவத்திற்கு உதவி புரிந்த மற்றைய சந்தேகநபர் கண்டியை சேர்ந்தவர் என குறிப் பிடப்பட்டுள்ளது.

குறித்த இருவரும் சட்டவிரோதமாக 43 பேரை இலங்கையிலிருந்து ரஷ்யாவிற்கு அனுப்பியதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைதானவர்கள் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன் னிலைப்படுத்தப் படவுள்ளனர். (அ)

# இலவச நீரிழிவு சிகிச்சை முகாம்!

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ். நீரிழிவுக் கழகமும் யாழ். பல்கலைக்கழக கல்லூரியும் இணைந்து நடத்தும் நீரிழிவு சிகிச்சை முகாமும் விழிப்பூட்டல் செயலமர்வும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

குருநகர் சென். ஜேம்ஸ் தேவாலயத்தில் நடைபெறவுள்ள இந்த முகாமில் நீரிழிவு பரிசோதனை, இரத்த அழுத்த பரிசோதனை, உடல் திணிவு சுட்டி கணித்தறிதல், பல் பரிசோதனை, புற்றுநோய் தொடர்பான விழிப்பூட்டல், நீரிழிவை கட்டுப்படுத்தும் மூலிகைகளும் பயன்பாடும், கண் பரிசோதனை, மருத்துவ ஆலோசனைகள், நீரிழிவு நோயாளர்களுக்கு நீரிழிவு கைநூல் வழங்கல் என் பன இலவசமாக செய்யப்படும்.

# யாழில் கசிப்புடன் பெண் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாணத்தில் கசிப்பை பொதி செய்து கொண்டிருந்த பெண்ணொருவர் நேற்று முன்தினம் புதன்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள் ளார். சுன்னாகம் தெற்கு, சுன் னாகம் பூதராயர் கோயிலடி பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தலை மையிலான குழுவினரின் சுற்றி வளைப்பில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட் டது. இதன்போது சந்தேகநபரிடமிருந்து பத்தாயிரம் மில்லி லீற்றர் கசிப்பும் அதனை பொதி செய்ய பயன்படுத்திய உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள் ளன. குறித்த பெண்ணை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பகவத் கீதை சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 19

பகவத் கீதை அத்தியாயம் 11 - விஷ்வரூப தரிசன யோகம் தொடர் சொற்பொழிவு நல்லூர் சிவகுரு ஆதினத்தில் பிரதி திங்கட்கிழமைகளில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமா கும் இந்த சொற்பொழிவை தவத்திரு வேலன் சுவாமிகள் வழங்குவார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
19.04.2024 வெள்ளிக்கிழமை
ඊළනාඩු
குரோதி வருடம், சித்திரை 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஈழ ஆதரவின் பெயரால்...?

தமிழ்நாட்டின் ஈழ ஆதரவாளர்கள் என்போர் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஈழத் தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பதில் முன்னணி வகித்திருக்கின்றனர். ஒருகாலத்தில் ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்காக ஒட்டுமொத்தத் தமிழ்நாடே உணர்வோடிருந்தது உண்மைதான். ராஜீவ் காந்தி கொலை தமிழ்நாட்டில் நடைபெற்றதற்குப் பின்னர் நிலைமைகள் தலைகீழ் மாற்றமடைந்தன. ஈழ ஆதரவுத் தளம் பெருமளவுக்கு சரிந்தது. ஆனால், அதன் பின்னர்கூட குறிப்பிடத்தக்களவு ஈழ ஆதரவாளர்கள் செயல்பட்டுக் கொண்டேயிருந்தனர்.

குறிப்பாக, 2009இற்கு பின்னரான அரசியல் சூழலில் சில அப்பாவித் தமிழ்நாட்டு ஈழ ஆதரவாளர்கள் தங்களின் உயிரையும் துறந்தனர். அப்பாவிகள் ஈழ ஆதரவின் பெயரால் உயிர்களை இழப்பதை நாம் ஆதரிக்க முடியாது - ஆதரிக்கவும்கூடாது. ஏனெனில், அவ்வாறானவர்கள் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்கள். அவ்வாறானவர்களை உணர்ச்சி வசப்படுத்திவிட்டு அவர்களின் தியாகத்தில் அரசியல் விவாதம் செய்ய முற்படுபவர்களோ - அவர்களின் பிள்ளைகளோ ஒருபோதுமே இவ்வாறான உயிர்த் தியாகங்களை செய்ய முயற்சித்ததில்லை - அவ்வாறான சம்பவங்கள் வரலாற்றில் இதுவரையில் பதிவாகவில்லை.

இது ஒருபுறமிருக்க, தமிழ்நாட்டின் ஈழ ஆதரவாளர்கள் என்போர் 2009 இற்குப் பின்னரான அரசியல் சூழலில் ஈழ ஆதரவின் பெயரால் ஆக்க பூர்வமான செயல்பாடுகள் எவற்றையும் முன்னெடுக்கவில்லை. வெறுமனே, உணர்ச்சிவசப்படும் அரசியலின் பக்கமாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர். வெறுமனே இலங்கை அரசாங்கத்தையும் இந்திய மத்திய அரசாங்கத்தையும் கண்டித்துக் கொள்வதையே ஒரு தொழிலாக முன்னெடுத்திருந்தனர். யதார்த்தபூர்வமான அரசியல் வழிமுறைகளை ஊக்குவிக்காமல் வெறுமனே போலியான தேசியவாத அரசியலுக்கு முன்னுரை எழுத முற்படுபவர்களாகவே பலர் இருந்தனர். அவர்களின் ஆளுமையும் அறிவாற்றலும் பின்னர் படிப்படியாகப் புலப்பட்டது. இதற்கு பழ. நெடுமாறன் ஒரு சிறந்த உதாரணம். அரசியலில் யதார்த்தங்களை புறந்தள்ளுவோர் என்னதான் அர்ப்பணிப்பு உள்ளவர்களாகத் தங்களைக் காண்பித்துக் கொண்டாலும்கூட அவர்களால் பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டமானது எந்த நன்மையையும் அடைய முடியாது. இதற்கு ஈழத் தமிழ் இனம் ஒரு சிறந்த உதாரணம்.

கச்சதீவு விவகாரத்தில் இந்திய மத்திய அரசாங்கம் சர்வதேச நீதிமன்றத்தை நாட வேண்டுமென்று பழ. நெடுமாறன் தெரிவித்திருக்கின்றார். ஈழத் தமிழர்களுக்கான நீதிக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டுமென்று கூறுவது போன்று இந்தியா சர்வதேச நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டுமென்று கூறியிருக்கின்றார். ஒரு பிராந்திய சக்தி அதன் அயலுறவு பிரச்னையை எதிர்கொள்வதற்காக சர்வதேச நீதிமன்றம் செல்ல வேண்டுமென்று கூறுவதிலிருந்து இவ்வாறானவர்களின் அறிவாற்றல் எத்தகையது என்பதை ஒருவர் புரிந்துகொள்ள முடியும்.

பெரிய நாடுகளுக்கு எதிராக சிறிய நாடுகளே சர்வதேச நீதிமன்றத்தை நாடுவது வழக்கம். அவ்வாறான சந்தர்ப்பங்களில்கூட சிறிய நாடுகளுக்கு ஆதரவான வகையில் விடயங்கள் நடைபெறுவதில்லை. ஏனெனில், சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பை வழங்கினால்கூட அதனை நடைமுறைப்படுத்துவது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இயலாத காரியம். ஏனெனில், பலம் பொருந்திய நாடுகள் சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பை அமுல்படுத்த மறுத்தால் அதற்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தால் எதனையும் செய்ய முடியாது. பிலிப்பைன்ஸ் விவகாரத்தில் சர்வதேச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சீனா சாதாரணமாகப் புறந்தள்ளியது.

ஆனால், இந்தியா போன்ற ஒரு பலமான நாடு - அதேவேளை ஓர் அணு ஆயுத சக்தியானது, அதன் சிறியதோர் அயல்நாட்டு பிரச்னையை கையாள முடியாது சர்வதேச நீதிமன்றத்தை நாடுமானால் அதன் பின்னர் இந்தியாவை ஒரு பிராந்திய சக்தியென்று கூறமுடியாது. இந்த அடிப்படையான விடயம் கூடத் தெரியாத ஒருவர், ஈழ ஆதரவாளராக இருக்கின்றார் என்றால் இவர்கள் இதுவரையில் எந்தளவுக்கு ஈழ ஆதரவின் பெயரில் சிறுபிள்ளைத்தனமாக செயல்பட்டிருப்பார்கள் என்பதை ஒருவர் இலகுவாக புரிந்துகொள்ள முடியும்.

தமிழ்நாட்டில் ஈழ ஆதரவின் பெயரால் முன்னெடுக்கப்பட்ட பலவாறான காரியங்கள் உண்மையில் ஈழ ஆதரவுக்கோ - அடித்தள மக்களின் விமோசனத்துக்கோ எந்த வகையிலும் பயன்படவில்லை. இந்த விடயத்தில் ஈழத் தமிழ்த் தேசிய தரப்புகள் மத்தியில் போதிய விழிப்புணர்வு இல்லை என்பது தான் பிரச்னையானது.

*யாழ். பல்கலைக்கழக பொன்விழா ஆண்டில்*

# சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாடு; சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்!

*யாழ்ப்பாணம், ஏப். 19*

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகம் எனும் பெயரில் இலங்கை பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாக ஆரம்பிக்கப்பட்டு இந்த வருடத்துடன் ஐம்பது ஆண்டுகளை பூர்த்தி செய்து பொன்விழா காண்கிறது.

ஈழத் தமிழர்களின் அறிவுக் கருவூலமாக திகழும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழ் சமூகத்தின் இருப்புக்கும் வளர்ச்சிக்கும் ஆற்றிய பங்களிப்பு ஏராளம். அந்த வகையில் ஐம்பதாவது ஆண்டு நிறைவிலும் அது புதிய பல பரிமாணங்களை பிரசவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில், முதலாவது சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாட்டை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப் படிப்புகள் பீடமும் கலைப்பீடத்தின் கல்வியியல் துறையும் இணைந்து ஒழுங்கமைத்துள்ளன.

நாளை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை காலை, மாலை அமர்வுகளாக இந்த மாநாடு நடைபெறவுள்ளது. காலை அமர்வுகள் கைலாசபதி கலையரங்கிலும் மாலை அமர்வுகள் உயர்பட்டப்படிப்புகள் பீடத்திலும் நடைபெறவுள்ளன.

‘நாளையை வலுப்படுத்தல் - கல்வியின் போக்குகளும் அவற்றை புரிந்துகொள்ளவும் உள்வாங்கவும் வட மாகாணத்தின் இயலுமைகள்’ எனும் கருப்பொருளில் இம்மாநாடு திட்டமிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா தலைமையிலும் உயர்பட்டப்படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் செ. கண்ணதாசன் மற்றும் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் ஆகியோரின் இணை தலைமையிலும் இந்த ஆய்வு மாநாடு அரங்கேறவுள்ளது.

கல்வியியல் துறைத் தலைவர் கலாநிதி ஆ. நித்திலவர்ணண் மாநாட்டின் இணைப்பாளராக செயல்படுவார்.

வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக்டிரஞ்சன் மற்றும் வட மாகாண கல்விப் பணிப்பாளர் தி. ஜோன் குயின்ரஸ் ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்பர்.

நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள அங்குரார்ப்பண நிகழ்வில் திறவுகோல் உரையை கொழும்புப் பல்கலைக்கழக கல்வியியல் பீட கல்வி உளவியல் இருக்கை பேராசிரியர் மஞ்சுளா விதாரண பத்திரண நிகழ்த்தவுள்ளார்.

‘வாண்மைத்துவ விருத்திக்கான ஆய்வு மைய புத்தாக்கங்கள் : வடக்கு இலங்கையின் ஆசிரியர் கல்விக்கான தந்திரோபாய அணுகுமுறை’ எனும் தலைப்பில் இந்த உரை நடைபெறும்.

திறவுகோல் உரையைத் தொடர்ந்து மாநாட்டின் கருப்பொருளை மையப்படுத்திய மையக்கருத்துரைகள் நடைபெறவுள்ளன. இந்தக் கருத்தரங்குக்கு உயர்பட்டப்படிப்புக்கள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் செ. கண்ணதாசன் தலைமை தாங்கவுள்ளார்.

‘இலங்கையின் ஆரம்ப பிள்ளைப்பருவக் கல்வியை முறைமைப்படுத்தல் - சவால்களும் பிரச்னைகளும்’ எனும் தலைப்பில் திறந்த பல்கலைக்கழக கல்வியியல் பீட பேராசிரியர் தி. முகுந்தனும், ‘வட மாகாண கல்வியின் சமகால உள சமூக நிலைமைகள்’ எனும் தலைப்பில் உள மருத்துவ நிபுணர் சி. சிவதாஸூம், ‘இலங்கையின் பாடசாலைக் கலைத்திட்டத்தின் சவால்களும் புதிய போக்குகளும்’ எனும் தலைப்பில் திறந்த பல்கலைக்கழக கல்வியியல் பீட பேராசிரியர் எவ். எம். நவாஸ்தீனும், ‘சட்டத் தீர்மானங்களை அறிவிப்பதில் கல்வியியல் ஆய்வுகளின் தேவைகள்’ எனும் தலைப்பில் களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்ற நீதிபதி ஜே. பி. ஏ. ரஞ்சித்குமாரும் உரையாற்றவுள்ளனர்.


ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இரண்டாம் நாள் அமர்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல் துறைப் பேராசிரியர் ஜெயலக்சுமி இராசநாயகம் தலைமை தாங்கவுள்ளார். இந்த நிகழ்வில் திறவுகோல் உரையை தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக கல்வியியல் மற்றும் மேலாண்மைத் துறைத் தலைவர் பேராசிரியர் கு. சின்னப்பன் ‘தமிழ் கற்பித்தலில் புதிய போக்குகள்’ எனும் தலைப்பில் நிகழ்த்தவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து ‘நாளையை வலுப்படுத்தல் - கல்வியின் போக்குகளும் அவற்றை புரிந்துகொள்ளவும் உள்வாங்கவும் வட மாகாணத்தின் இயலுமைகள்’ எனும் தலைப்பில் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் தலைமையில் திறந்த புலமைத்துவக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கல்வித் துறையை சேர்ந்தவர்கள் பார்வையாளர்களின் வினாக்களுக்கு விடையளிப்பர். ‘வடக்கு மாகாண பாடசாலைகளின் வெற்றிகளும் பின்னடைவுகளும்’, ‘பாடசாலைகளும் சமூகமும் - எங்கு நாம் நிற்கின்றோம் - முன்னோக்கிப் போவதற்கான வழிகள்’, ‘எதிர்பார்க்கப்படும் கற்றல் பேறுகளை அளவிடுதல்’ மற்றும் ‘கல்வியும் வேலைவாய்ப்பும் - சந்தர்ப்பங்களும் சவால்களும்’ எனும் தலைப்புகளில் இக்கலந்துரையாடல் கட்டமைக்கப்பட்டுள்ளது. கலந்துரையாடலின் கருத்துச் செறிவுகளை மாநாடு நிறைவுபெற்ற பின்னர் கொள்கை ஆவணமாக வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இரண்டு நாட்களும் மாலை அமர்வுகள் பலாலி வீதியில் அமைந்துள்ள உயர்பட்டப் படிப்புகள் பீடத்தில் நடைபெறும். இரண்டு நாள் மாலை அமர்வுகளிலும் தலா 44 ஆய்வுக் கட்டுரைகள் பல்வேறு தலைப்புகளிலும் சமர்ப்பிக்கப்படவுள்ளன. பல்கலைக்கழகங்களின் ஆய்வு மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்வியியல் கல்லூரிகள் மற்றும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரியக் கல்வியியலாளர்கள், கல்வி நிர்வாகிகள், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் என பன்முகப் படுத்தப்பட்ட ஆய்வாளர்களால் பல்வேறு தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்** — புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**இடபம்** — பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். சலுகைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்** — உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கடகம்** — கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**சிம்மம்** — ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சி வசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**கன்னி** — திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். நிதானம் தேவைப்படும் நாள்.

**துலாம்** — எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**விருட்சிகம்** — சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். சிலரின் உதவியை நாடுவீர்கள். நட்பு வட்டம் விரியும். மரியாதை கூடும். சாதித்துக் காட்டும் நாள்.

**தனுசு** — கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். தொழில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மகரம்** — சந்திராஷ்டமம் இருப்பதால் சில விமர்சகர்கள் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம். விட்டுக் கொடுக்க வேண்டிய நாள்.

**கும்பம்** — கடினமான வேலைகளையும் எளிதாக முடிப்பீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**மீனம்** — உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். பணவரவு திருப்தி தரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களை அதிசிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். அமோகமான நாள்.

### பாராளுமன்றத் தேர்தல்:

# தமிழகத்தில் இன்று வாக்குப்பதிவு

சென்னை, ஏப். 19

இந்தியாவின் பாராளுமன்றத் தேர்தல் ஏழு கட்டங்களாக நடக்கிறது. இதில், முதல் கட்டத்திலேயே தேர்தலை சந்திக்கின்றன தமிழ்நாடு - புதுச்சேரி. தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகளிலும் புதுச்சேரியில் உள்ள ஒரு தொகுதியிலும் இன்று வாக்குப் பதிவு நடக்கிறது. காலை 7 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை வாக்குப் பதிவு நடைபெறும்.

தமிழ்நாட்டில் 39 தொகுதிகளில் 950 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். புதுச்சேரி தொகுதியில் 26 பேர் களத்தில் இருக்கின்றனர். தமிழ்நாட்டிலேயே அதிகபட்சமாக கரூர் தொகுதியில் 54 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். தமிழ்நாட்டில் இந்தியா கூட்டணி என்ற பெயரில் தி.மு.க., காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, ம.தி.மு.க., கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகியவை இணைந்து போட்டியிடுகின்றன.

தேசிய ஜனநாயகக் கூட்டணி என்ற பெயரில் பாரதிய ஜனதா கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி, அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், இந்திய ஜனநாயகக் கட்சி, புதிய நீதி கட்சி, இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகம், தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், ஓ. பன்னீர்செல்வம் அணி ஆகியவை இணைந்து தேர்தலை சந்திக்கின்றன.

அ.தி.மு.க. கூட்டணியில் அ.தி.மு.க., புதிய தமிழகம், எஸ்.டி.பி.ஐ., தே.மு.தி.க. ஆகியவை இணைந்து தேர்தலைச் சந்திக்கின்றன.

இவை தவிர, நாம் தமிழர் கட்சி 40 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

வாக்கு எண்ணிக்கை ஜூன் 4ஆம் ஆரம்பமாகும்.

(ஐ)

# வட மாநிலங்களிலும் இந்தியா கூட்டணி அலை

## முதலமைச்சர் ஸ்டாலின்

சென்னை, ஏப். 19

"தமிழகத்தில் மட்டுமல்ல, வட மாநிலங்களிலும் இந்தியா கூட்டணிக்கான அலை வீசிக் கொண்டிருக்கிறது -என்று சென்னையில் நடந்த பிரசாரப் பொதுக் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

மேலும், தேர்தல் பத்திர ஊழல், மோடியின் கிளீன் மோடி என்கிற முகமூடியை கிழித்தெறிந்து மோடியின் ஊழல் முகத்தை பட்டவர்த்தனமாக வெளிச்சம் போட்டு காட்டிவிட்டது. உடனே மோடி என்ன செய்கிறார்? தன்னுடைய பெயரைக் காப்பாற்றிக் கொள்ள, தேர்தல் பத்திரம் வந்த பிறகுதான், யார் யாருக்கு நிதி கொடுக்கிறார்கள் என்பது வெளிப்படையாக தெரிய ஆரம்பித்தது என்று வடை சுட ஆரம்பித்துவிட்டார் - என்றும் சொன்னார்.

# ஓய்ந்தது பிரசாரம்

சென்னை, ஏப். 19

இறுதிக்கட்ட பிரசாரத்தை முன்னிட்டு அரசியல் தலைவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வந்த நிலையில், தமிழகம் முழுவதும் மக்களைத் தேர்தலுக்கான பிரசாரம் நேற்று முன்தினம் மாலையுடன் முடிவுக்கு வந்தது.

இந்தியாவின் பொதுத் தேர்தல் 7 கட்டங்களாக நடக்கின்றன. இதில், முதல் கட்டமாக இன்று தமிழ்நாடு - புதுச்சேரியில் வாக்குப் பதிவு நடக்கிறது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் மாலையுடன் கட்சிகளின் பிரசாரம் முடிவுக்கு வந்தது.

# "ஓர் அரசாங்கம் 10 ஆண்டுக்கு மேல் ஆட்சியில் இருக்கக்கூடாது"

சென்னை, ஏப். 19

எந்த ஓர் அரசும் 10 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சியில் இருக்கக் கூடாது. ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை அரசு மாற வேண்டும் - என்று முன்னாள் அமைச்சர் ப. சிதம்பரம் கூறியுள்ளார்.

"நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் மத்தியில் 10 ஆண்டு காலம் ஆட்சி நடந்துள்ளது. 10 ஆண்டு காலம் என்பது குறுகிய காலமல்ல. 10 ஆண்டு காலம் என்பது ஓர் அரசாங்கத்தை மதிப்பிட போதுமான காலம். இந்த அரசு என்ன விட்டுச் சென்றுள்ளது என்றால், பணவீக்கம் மற்றும் வேலையின்மை ஆகியவற்றைத்தான் நம்மிடம் விட்டுச் சென்றுள்ளது. இந்த இரண்டு காரணங்களுக்காக, இந்த அரசாங்கம் வெளியேற வேண்டும்.

எனது கருத்து என்னவென்றால், எந்த ஓர் அரசும் 10 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சியில் இருக்கக் கூடாது. ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை அரசு மாற வேண்டும், சிந்தனை மாற வேண்டும், கொள்கைகள் மாற வேண்டும், ஆட்சியாளர்கள் மாற வேண்டும். ஒரு நாடு தொடர்ந்து முன்னேறிச் செல்ல இது மட்டுமே ஒரே வழி. எனவே, நாடு முன்னேற வேண்டுமானால் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும். தற்போதைய ஆட்சி செல்ல வேண்டும். எனவே, மக்கள் மாற்றத்துக்கு வாக்களிக்க வேண்டும், இந்தியா கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும் - என்றார்.

(ஐ)

# தோற்றுவிடுவோமா என்ற அச்சத்தில் பெரிய கோயிலுக்கு செல்லாத வேட்பாளர்கள்!

தஞ்சாவூர், ஏப். 19

உலக புகழ்பெற்ற தஞ்சாவூர் பெரிய கோவிலில் கடந்த, 2010ஆம் ஆண்டு இராஜராஜ சோழனின் ஆயிரமாவது சதய பெருவிழா விழா நடந்தது. அப்போது, முதல்வராக இருந்த கருணாநிதி, கோவிலுக்குள் நடந்த 1,000 பரதநாட்டிய கலைஞர்களின் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியை காண வந்தார். அதன் பின், 2011, 2016ம் ஆண்டுகளில் நடந்த தேர்தலில், தி. மு. க. தோல்வியை சந்தித்தது. கருணாநிதி மீண்டும் பெரிய கோவிலுக்கு வர முடியாமல் போனது.அப்போது விழாவுக்கு வந்த ராஜா எம். பிக்கும் "2 ஜி" வழக்கு சிக்கல் உருவானது. இதேபோல், முன்னாள் பிரதமர் இந்திரா, முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர்., முன்னாள் ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா போன்றோரை தற்போது வரை உதாரணமாக கூறி வருகின்றனர். மேலும், மாமன்னன் ராஜராஜ சோழனின், சதய விழாவுக்கு கூட அமைச்சர், எம். பிக்கள், சட்டமன்ற உறுப் பினர்கள் செல்வதற்கு தயக்கம் காட்டினர்.

இந்த நிலையில், அண்மையில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட தலைவர்கள் பலரும் கோவில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்களில் பிரசாரத்தில் ஈடுபட்டனர். எனினும், தஞ்சை பெருங்கோயில் பகுதிக்கு சென்று அவர்கள் வாக்கு சேகரிக்க வில்லை. காரணம் தேர்தலில் வெற்றி பெற மாட்டோமா என்ற அச்சமே இதற்குக் கார ணம் என்று கூறப்படுகின்றது.

பகுத்தறிவு பேசுவோரும் இறை நம்பிக்கை கொண்டோரும் கூட இந்த மூடநம்பிக்கையில் ஆழ்ந்து கிடக்கின்றனர் என்று மக்கள் கேலி செய்து வருகின்றனர்.

(ஐ)

# அண்மைக்கால மரணங்களுக்கு மாரடைப்பே பிரதான காரணம்!

## தொற்றா நோய்கள் இயக்குநரகம் கூறுகிறது

கொழும்பு, ஏப். 19

**அண்மைக்கால மரணங்களுக்கு மாரடைப்பே பிரதான காரணமாக அமைவதாக சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் இயக்குநரகத்தின் விசேட நிபுணர் ஷெரில் பால சிங்கம் தெரிவித்துள்ளார்.**

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அதன்படி 2010 முதல் 2020 வரை அரசு மருத்துவமனைகளில் அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் மாரடைப்பு காரணமாக இருப்பதாகவும், இந்த நிலை இதயத்திற்கு இரத்தத்தை வழங்கும் இரத்த நாளங்கள் சேதமடைவதால் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுகாதாரமற்ற உணவு, உடல் உழைப்பு இல்லாமை, புகையிலை, மதுப் பழக்கம், மன உளைச்சல் போன்றவை மாரடைப்புக்கு முக்கியக் காரணம் என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கணனிகளின் அதிகரித்த பாவனையினால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சுறுசுறுப்பான வாழ்க்கை முறையிலிருந்து விலகியிருப்பதாகவும், முடிந்தவரை நடக்கப் பழக வேண்டும் என்றும் அவர் கூறினார். (அ)

# மின்சார சபை சீரமைப்பு திருத்த சட்டமூல வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஏப். 19

மின்சார சபை மறுசீரமைப்பு திருத்தச் சட்டமூலம் தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தனது எக்ஸ் தளத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த பதிவில் மின்சார சபை மறுசீரமைப்பு திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சாரத் துறையில் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக முன்வைக்கப்பட்ட இலங்கை மின்சார சபை சட்டமூலத்தில் காணப்பட்ட சில குறைபாடுகளை மையப்படுத்தி வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றிருந்தன. இந்த சட்டமூலம் கடந்த டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தன.

இருப்பினும், வெளியிடப்பட்ட சட்டமூலத்தின் சிங்கள மொழி பிரதியில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டமை தொடர்பில் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. அதற்கமைய, இந்த சட்டமூலத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அமைச்சரவை அண்மையில் அதற்கு அனுமதி வழங்கி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஒருவருக்கு அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய மாதாந்தம் 16,975 ரூபா!

கொழும்பு, ஏப். 19

நாட்டில் தனி நபரின் மாதாந்த செலவு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் பெப்ரவரி மாதத்தில் குறைந்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, நாட்டில் உள்ள ஒருவருக்கு அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாதாந்தம் குறைந்தபட்சம் 16,975 ரூபாய் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பெப்ரவரியில், தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டின்படி, நாட்டின் பணவீக்கம் முந்தைய மாதத்துடன் ஒப்பிடுகையில் குறைந்துள்ளது.

மேலும் கொழும்பு மாவட்டத்தில் வாழும் ஒருவருக்கு குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய 18,308 ரூபா தேவைப்படுவதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மதுபோதையிலிருந்த நபரால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை!

கொழும்பு, ஏப். 19

குருவிட்ட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கீரிகம பகுதியில் நபரொருவரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக குருவிட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் குருவிட்ட, கீரிகம பகுதியைச் சேர்ந்த 59 வயது நபராவார்.

மது போதையிலிருந்த நபரொருவர் உயிரிழந்தவரது வீட்டிற்கு முன் சென்று தீப்பெட்டியொன்று கேட்டுள்ள நிலையில் தீப்பெட்டியை வழங்கத் தாமதமானதால் குறித்த நபர் உயிரிழந்தவரது வீட்டாரைக் கடுமையான வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

இதன்போது, உயிரிழந்த நபரான வீட்டின் உரிமையாளர் இவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது எனச் சந்தேக நபரிடம் கூறியுள்ளார். இதனையடுத்து சந்தேக நபர் வீட்டின் உரிமையாளரைத் தாக்கியுள்ள நிலையில் காயமடைந்தவர் திடீரென மயங்கி தரையில் விழுந்துள்ளார்.

பின்னர் இவர் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ள நிலையில் குருவிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் செயல்பாடு குறித்து தயாசிறி கவலை!

கொழும்பு, ஏப். 19

சுதந்திரக்கட்சியின் அதிகாரத்தை கைப்பற்றும் அரசாங்கத்தின் சதித்திட்டத்திற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தலைமைத்துவம் வழங்குகின்றமை கவலையளிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகசந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கட்சியின் பதவி நிலைகளில் இருந்து விலகியுள்ள போதிலும் சுதந்திரக்கட்சியின் பொறுப்புக்களை நான் ஒருபோதும் கைவிடமாட்டேன்.

நான் அனுந்தரப்பினருடனோ அல்லது எதிர்த்தரப்பினருடனோ இதுவரை இணையவில்லை. சுதந்திரக்கட்சியின் பின்னடைவுக்கு பல காரணிகள் உள்ளன. சுதந்திரக்கட்சி என்ற ரீதியில் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாம் ஒரு தீர்மானத்தை மேற்கொண்டோம்.

அரசாங்கத்தில் இருந்து விலகுவதற்கும் அமைச்சு பதவிகளில் இருந்து வெளியேறுவதற்கும் தீர்மானித்தோம். சர்வகட்சி அரசாங்கம் நாட்டிற்கு தேவையாகவுள்ளதென கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன பல தடவைகள் வலியுறுத்தியிருந்தார். சுதந்திரக்கட்சியின் அதிகாரத்தை கைப்பற்றும் அரசாங்கத்தின் செயற்பாடே தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

சுதந்திரக் கட்சியை கட்டியெழுப்புவதற்கும் கட்சியின் வளர்ச்சிக்கும் ஒத்தழைப்பு வழங்கிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க போன்றவர்கள் இவ்வாறன சதித்திட்டங்களுக்கு தலைமைத்துவம் வழங்குகின்றமை மிகவும் கவலைக்குரியது.

எதிர்வரும் தேர்தல்களில் சுதந்திரக்கட்சியின் அதிகாரத்தை இல்லாமலாக்கும் முயற்சியின் ஒரு அங்கமாகவே இது அமைகின்றது-என்றார். (அ)

# கலாசாலையில் தமிழக பேராசிரியரின் அதிதி உரை



யாழ்ப்பாணம், ஏப். 19

தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியியல் புலத் தலைவர் பேராசிரியர் முனைவர் கு . சின்னப்பன் வழங்கும் அதிதி உரை எதிர்வரும் திங்கள் கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் "ஆசிரியர் கல்வியின் சமகாலச் செல்நெறி" என்ற பொருளில் உரை இடம்பெறும்.

நிகழ்வில் அதிதி அறிமுக உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியல் துறை விரிவுரையாளர் இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா ஆற்றுவார்.

தமிழக பேராசிரியரின் பெறுமதி மிக்க இவ்வுரை நிகழ்வில் விரும்பிய எவரும் கலந்து பயன் கொள்ளலாம் என கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார். (அ)

# 14 வாரங்களில் இலங்கைக்கு 7 இலட்சம் சுற்றுலா பயணிகள்!

கொழும்பு, ஏப். 19

7 இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகை என்ற மைல்கல்லை இலங்கை 14 வாரங்களில் கடந்துள்ளது என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் மொத்தம் 718,315 சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

அத்துடன் ஏப்ரல் மாதத்தின் முதல் 15 நாட்களில் 82,531 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இது நாட்டுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் வளர்ச்சி வேகம் சீராக இருப்பதை காட்டுகிறது என அச்சபை தெரிவித்துள்ளது.

மேலும் ஐக்கிய இராச்சியம் தனது பிரஜைகளுக்காக வெளியிட்டுள்ள இலங்கைக்கான பயண ஆலோசனையை தளர்த்தியுள்ளமையினால் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளின் வருகை எதிர்பார்க்கப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மே தினத்தின் பின்னர் பெரமுனவில் மாற்றம்!

## கூறுகிறார் சாந்த பண்டார



கொழும்பு, ஏப். 19

மே தினத்தின் பின்னர் பொதுஜன பெரமுன கட்சிக்குள் பாரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசியல் கட்சி என்ற ரீதியில் பொதுஜன பெரமுன பலப்படுத்தும் நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்துள்ளோம். எமது கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ, தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் இதற்கான வழிகாட்டல்களை வழங்கி வருகின்றனர்.

கட்சியில் பாரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கு நாம் எதிர்ப்பார்த்துள்ளோம். பொதுஜன பெரமுன வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாகவும் பலர் விமர்சித்துவருகின்றனர். அது மிகவும் தவறான கருத்தாகும்.

எமது கட்சி வீழ்ச்சியடையவில்லை. எதிர்வரும் மே தின பேரணியில் நாம் அதனை நிரூபிப்போம். மே தின கூட்டத்தினை தொடர்ந்து அனைத்து தேர்தல் தொகுதிகளிலும் கிராமமட்டத்தில் இருந்து எமது வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம். எதிர்வரும் எந்தவொரு தேர்தலையும் நாம் வெற்றிகரமாக எதிர்கொள்வோம்-என்றார். (அ)

# 1700 ரூபா வழங்கு!

## கொழும்பில் இன்று போராட்டம்

கொழும்பு, ஏப். 19

**மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை வழங்குமாறு வலியுறுத்தி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக கறுப்புப்பட்டி போராட்டம் நடத்தப்படவுள்ளது.**

**இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணியளவில் இப்போராட்டம் நடத்தப்பட உள்ளது.**

சம்பள உயர்வு பேச்சுவார்த்தையை முதலாளிமார் சம்மேளனம் புறக்கணிப்பது, சம்பள உயர்வு இது வரை வழங்கப்படாதமை என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இப்போராட்டம் நடத்தப்படவுள்ளது.

"இந்த கறுப்புப்பட்டி போராட்டம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரான மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அழுத்தம் கொடுத்து வருகிறது." - என்று இதொகா ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேயிலைக்கான சம்பள நிர்ணய சபையின் அங்கத்தவரும், இ.தொ.காவின் பிரதான சட்ட ஆலோசகரும், சட்டத்தரணியுமான கா.மாரிமுத்துவின் பங்களிப்போடு நடைபெறவிருந்த பேச்சுவார்த்தையை, முதலாளிமார் சம்மேளனம் இறுதி நேரத்தில் புறக்கணித்தது.

இவற்றைக் கண்டிக்கவே இந்தப் போராட்டம். இ.தொ.காவின் சிரேஷ்ட இயக்குநர் எஸ்.ராஜமணி இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். கொழும்பு, இரத்தினபுரி, பலாங்கொடை, கஹவத்தை, இறக்குவானை, அவிசாவளை, தெரணியகலை, எட்டியாந்தொட்டை, கேகாலை, குருநாகல், மத்துகம போன்ற பிரதேசங்களிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்களும், நலன் விரும்பிகளும் கறுப்புப் பட்டி அணிந்து இதில் பங்கேற்பர்.

அடிப்படைச் சம்பளமாக 1,700 ரூபாவை வலியுறுத்தியே இப்போராட்டம் நடத்தப்படுகிறது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே வேளை, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பதுளை மாவட்டத்திலும், அதன்பின்னர் நுவரெலியாவிலும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ)

# தொலைத்தொடர்புக் கம்பங்களை துவம்சம் செய்த காட்டு யானைகள்



வவுனியா, ஏப். 19

வவுனியா,செட்டிக்குளம் - மன்னார் வீதியில் அமைக்கப்பட்டுள்ள 16 தொலைத்தொடர்பு கம்பங்களைக் காட்டு யானைகள் நேற்று சேதப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா செட்டிக்குளம் மன்னார் வீதியில் பறையனாளங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு இரண்டு கிலோமீற்றர் முன்பாக டயலொக் மற்றும் மொபிட்டல் தொடர்பாடல் வலையமைப்பினரால் அமைக்கப்பட்ட 16 தொலைத்தொடர்பு கம்பங்களை இவ்வாறு காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சேதமடைந்த தொலைத் தொடர்புக் கம்பங்களை சரிசெய்யும் பணிகள் இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த பகுதியில், காட்டு யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைந்து பயிர் நிலங்களை சேதப்படுத்தும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பற்பசையில் போதைப்பொருள்!

## கொழும்பு சிறைச்சாலையில் சம்பவம்

கொழும்பு, ஏப். 19

கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரை பார்வையிட வந்த நபரொருவர் பற்பசை ரியூபிற்குள் போதைப்பொருளை மறைத்துவைத்துக் கொண்டு வந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பார்வையாளர்களைச் சோதனையிடும் பணியில் ஈடுபட்டிருந்த சிறைச்சாலை அதிகாரிகள் குறித்த நபர் கொண்டுவந்த பொருட்களைச் சோதனையிடும் போதே போதைப்பொருள் மறைத்து வைத்துக் கொண்டு வரப்பட்டுள்ளமை அம்பலமாகியுள்ளது.

இந்நிலையில் அந்நபரைக் கைது செய்த பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# மியன்மாரில் மீட்கப்பட்ட இலங்கையர் நாட்டுக்கு!

கொழும்பு, ஏப். 19

மியன்மாரின் மியாவாடி இணையக் குற்றப் பகுதியில் இருந்து மீட்கப்பட்ட 08 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த யு.எல் 403 என்ற விமானத்தில் தாய்லாந்தில் இருந்து அவர்கள் இந்த நாட்டுக்கு வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 06 ஆண்களும் இரண்டு பெண்களும் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 4ஆம் திகதி மியன்மாரின் மியாவாடி இணையக் குற்றப் பகுதியில் பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 08 இலங்கையர்களை விடுவிப்பதற்காக மியன்மார் பாதுகாப்புப் படையினர் செயற்பட்டனர்.

இவர்களை இலங்கைக்கு அனுப்பும் நோக்கில் மியாவாடி மத்திய பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், பாதுகாப்பு நிலைமை தொடர்பில் ஏற்பட்ட பிரச்னை காரணமாக கடந்த 11ஆம் திகதி மியான்மரில் உள்ள இலங்கை தூதரகம் மற்றும் அந்நாட்டு அதிகாரிகள் அவர்களை தாய்லாந்தில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்திருந்தனர்.

அத்துடன் தாய்லாந்திற்கு அனுப்பப்பட்ட 08 இலங்கையர்களும் இன்று இலங்கை வந்துள்ளதாகவும், அவர்களின் வாக்குமூலங்களை பாதுகாப்பு தரப்பினர் பதிவு செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# புறக்கோட்டையில் அனுமதியற்ற கடைகளை அமைப்பதன் பின்னணியில் கடத்தல்காரர்கள்

கொழும்பு, ஏப். 19

கொழும்பு புறக்கோட்டையில் அனுமதியற்ற விதத்தில் கடைகளை நிர்மாணிப்பதன் பின்னணியில் ஒழுங்கமைக்கப்பட்ட கடத்தல்காரர்கள் குழுவொன்று இருப்பதாக கொழும்பு மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை வெளிப்படுத்தியுள்ளது.

கொழும்பு மிதக்கும் சந்தைக்கு முன்பாக இடிக்கப்பட்டுள்ள 21 கடைகளும் கடத்தல்காரர்களால் கட்டப்பட்ட சட்டவிரோத கட்டுமானங்களே என கொழும்பு மாநகரசபையின் நகர அழகுபடுத்தல் திட்ட இணைப்பாளர் பொறியியலாளர் குமுது போகஹவத்த தெரிவித்தார்.

கடத்தல்காரர்கள் கடைகளை தினசரி வாடகைக்கு வேறு நபர்களுக்கு குத்தகைக்கு விட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றார். சட்டவிரோத கட்டுமானம் குறித்து முதன்முறையாக முறைப்பாடு கிடைத்தால் அதனை அகற்றுவதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறினார்.

எனவே இவ்வாறான ஒழுங்கமைக்கப்பட்ட கடத்தல்காரர்களுக்கு இரையாகி பணத்தை வீணடிக்க வேண்டாம் என கொழும்பு மாநகர சபையும் நகர அபிவிருத்தி அதிகார சபையும் மக்களிடம் கேட்டுக்கொள்கின்றன.

அனுமதி பெறாத கடைகளை அகற்றும் முன், கடை உரிமையாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான முதல் அறிவிப்பு கடந்த ஆண்டு டிசெம்பர் 20ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வெளியிடப்பட்டது.

அதனையடுத்து, கடந்த ஜனவரி 2ஆம் திகதி அனைத்து கடை உரிமையாளர்களுக்கும் 14 நாட்களுக்குள் கடைகளை அகற்றுமாறு கொழும்பு மாநகர சபை எழுத்து மூலம் அறிவித்தல் விடுத்துள்ளது. பல தடவைகள் இந்த கடைகளின் உரிமையாளர்களை அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு வாய்மொழி அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக கொழும்பு மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிடுகின்றன.

ஆனால் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அகற்றப்படாததால் கடந்த 16, 17 ஆகிய இரு தினங்களில் இந்த அனுமதியற்ற கடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொறியாளர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இந்த கடைகளை அவற்றிலிருந்து அகற்றுவதற்கு நகர சபையினால் செலவிடப்படும் பணத்தை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படும் என கொழும்பு மாநகர சபையின் நகர அழகுபடுத்தல் திட்ட இணைப்பாளர் பொறியியலாளர் குமுது போகஹவத்த தெரிவித்தார்.

கொழும்பு மிதக்கும் சந்தைக்கு முன்பாக உள்ள கடைகளை அகற்றுவது தொடர்பில் ஊடகங்களுக்கு அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது, இந்த இடத்தில் 73 சட்டவிரோத கடைகள் கட்டப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

2013 ஆம் ஆண்டும் அகற்றப்பட்டு, கொழும்பு பஸ்தியன் மாவத்தை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதி மக்கள் அகற்றப்பட்டு அதனை கவர்ச்சிகரமான முறையில் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகம் மகிந்த விதானாராச்சி தெரிவித்தார்.

பத்தரமுல்லை, செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகம் மகிந்த விதானாராச்சி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 2013ஆம் ஆண்டு இந்த இடத்தில் கட்டப்பட்ட சட்டவிரோதக் கடைகளை நாங்கள் அகற்றிய பின்னர், கடந்த கோவிட் மற்றும் போராட்டத்தின் போது சில ஒழுங்கமைக்கப்பட்ட நபர்கள் வெவ்வேறு காலங்களில் மிதக்கும் சந்தையின் முன் கடைகளைக் கட்டியுள்ளனர். அவர்களை அந்த இடத்தை விட்டு செல்லுமாறு அறிவித்தும் அவர்கள் அங்கிருந்து செல்லாததன் காரணத்தினால் இந்த கடைகளை அகற்றுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபை கொழும்பு மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்தது.

கொழும்பு மனிங் சந்தையில் மாத்திரம் 231 அனுமதியற்ற கடைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். கடைகளை அகற்றுவதை ஏற்றுக்கொண்ட போதிலும், கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கடைகளை அகற்றுவது குறித்து ஆலோசிக்க உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக மேலதிக பணிப்பாளர் நாயகம் மஹிந்த விதானாராச்சி மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மிதக்கும் சந்தை ஜப்பானிய முதலீட்டாளர் ஒருவருக்கு வழங்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள போதிலும், இது தொடர்பில் இதுவரை இணக்கப்பாடு எட்டப்படவில்லை என நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஈ.ஏ.சி.பிரியசாந்த தெரிவித்தார். ஆனால் இந்த திட்டத்தின் மதிப்பு குறித்து அடிப்படை புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது-என்றார்.

மேலும், இந்த சந்தை வளாகத்தை அகற்றியதற்கும், மிதக்கும் வணிக வளாகத்தை ஜப்பானிடம் ஒப்படைப்பதற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் தெரிவித்தார்.

மக்கள் நினைக்கும் வகையில் அனுமதியற்ற கட்டுமானங்களை மேற்கொள்ள சட்டத்திற்கு எந்த உரிமையும் இல்லை எனவும், இந்த அனுமதியற்ற கட்டுமானங்களை ஒழுங்கமைக்கப்பட்ட கடத்தல்காரர்கள் அநியாயமாக பயன்படுத்திக் கொள்கின்றனர் எனவும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். (அ)

# தேர்தல்களை பிற்போடுவதை நாம் கடுமையாக எதிர்ப்போம்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, ஏப். 19

தேர்தல்களை பிற்போடுவதை சிறிதளவும் சகித்துக் கொள்ளப் போவதில்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்களை பிற்போடுவதற்கான முயற்சிகள் இடம்பெற்றால் அதனை சிறிதளவும் சகித்துக்கொள் ளப்போவதில்லை அதனை எதிர்க்கவும் தயங்கப் போவதில்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தேர்தல்களை பிற்போடுவது சர்வஜனவாக்குரிமை குறித்த மக்களின் நம்பிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என குறிப்பிட்டுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரட்ண, மக்களின் வாக்குரிமைக்கு சவால் விடுக்கின்ற விடயமாகவும் இது மாறும் என தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல்களில் எது முதலில் இடம்பெறவேண்டும் என தெரிவிக்கும் அரசமைப்பு ஏற்பாடுகள் எதுவும் இல்லை என குறிப்பிட்டுள்ள அவர், அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் இந்த தேர்தல்கள் இடம்பெற வேண்டும் என்றே சட்டம் தெரிவிக்கின்றது எனவும் கூறினார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு பதில் தற்போதைய ஜனாதிபதி ஆட்சி புரிகின்றார் என்றாலும் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலம் இந்த நவம்பருடன் முடிவிற்கு வருகின்றது என தெரிவித்துள்ள கௌசல்ய நவரட்ணக், நவம்பருக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தின் ஆயுள் காலம் முடிவடைந்ததும் பாராளுமன்ற தேர்தலை நடத்த வேண்டும். பாராளுமன்றத்தை அதற்கு முன்னர் கலைக்க முடியுமென்றால் ஜனாதிபதி தேர்தலிற்கு முன்னர் பாராளுமன்ற தேர்தலை நடத்தலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்தலைநடத்தவேண்டியது பாராளுமன்றத்தினதும் தேர்தல் ஆணையகத்தினதும் கடமை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

## இசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 19

இணுவில் அறிவாலயம் முன்னெடுக்கும் சித்திரைப் புத்தாண்டு இசை நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

இணுவில் அறிவாலய ஆறு. திருமுருகன் மண்டபத்தில் பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பஷன் ஹவுஸின் உரிமையாளர் த. கந்தசாமி பங்கேற்பார்.

இசை அரங்கில் இணுவையூர் அழகேசன் மைந்தர்களான அமிர்தலோஜனன், அமிர்தசிந்துஜன் ஆகியோர் வழங்குவர். இதில், அணிசெய் கலைஞர்களாக வயலின் - கே. வேலதீபன், மிருதங்கம் க. கஜன், கஞ்சிரா - நா. சிவசுந்தரசர்மா, முகர்சங்கு - சி. செந்தூரன் பங்கேற்பர்.

# மாணவர்களிடம் நீரிழிவைக் கண்டறிய பாடசாலைகளில் விசேட கணக்கெடுப்பு

கொழும்பு, ஏப். 19

பாடசாலை மாணவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை கண்டறிய எதிர்வரும் நாட்களில் விசேட கணக்கெடுப்பு நடத்தப்படும் என சமூக மருத்துவ நிபுணர் ஷெரின் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

பாடசாலை குழந்தைகளைக் மையப்படுத்தி நடத்தப்பட்ட சோதனையில், உடல் பருமன், உயரத்துக்கு ஏற்ற எடை இல்லாமை ஆகிய இரண்டு காரணிகள் ஆராயப்பட்டதாகவும், நகர்ப்புறங்களில் உள்ள பெரும்பாலான குழந்தைகள் இந்த ஆபத்துக் காரணிகளால் உயிரிழந்து இருப்பது தெரியவந்ததாகவும் அவர் கூறினார்.

மேலும், பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில் விற்பனை செய்யப்படும் உணவு தொடர்பில் சுகாதார அமைச்சினால் முன்னர் தயாரிக்கப்பட்ட ஆலோசனை தொடர் தற்போது செயலிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கல்வி அமைச்சின் செயலாளரின் நேரடித் தலையீட்டை முறையாக தயாரித்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக சமூக மருத்துவ நிபுணர் ஷெரின் பாலசிங்கம் குறிப்பிட்டுள்ளார். (அ)

# தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் புதிய அரசமைப்பு உருவாகும்!

கொழும்பு, ஏப். 19

மக்களுடன் கலந்துரையாடி, மக்கள் மயப்படுத்தப்பட்டதாகவே தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் - என்று அக்கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

அரசமைப்பு என்பதை பலவந்தமாக திணிக்க முடியாது. அது தொடர்பில் மக்கள் மத்தியில் கலந்துரையாடல் மற்றும் மக்களின் ஆதரவு அவசியம். ஆனால் இலங்கையில் சோல்பரி யாப்பு, 72 குடியரசு யாப்பு மற்றும் 78 இல் புதிய அரசமைப்பு என்பன மக்களிடம் முறையாக கலந்துரையாடப்படாமல் கொண்டுவரப்பட்டவையாகும்.

தென்னாபிரிக்காவில் அரசமைப்பு முன்வைக்கப்பட்ட போது மக்களிடம் பரந்தப்பட்டளவில் கலந்துரையாடப்பட்டது. மன்னர் ஆட்சி நடைபெற்ற நேபாளத்தில்கூட மக்கள் விருப்பதுக்கமையவே புதிய அரசமைப்பு கொண்டுவரப்பட்டது. எனவே, தேசிய மக்கள் சக்தியின் முதலாவது நாடாளுமன்ற ஆட்சிகாலத்துக்குள் மக்கள் மயப்படுத்தப்பட்ட புதிய அரசமைப்பு முன்வைக்கப்படும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறைமையை நீக்கி, பாராளுமன்றத்துக்கு அதிகாரத்தை பகிரும் யோசனையும் உள்ளது - என்றார். (அ)

# நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஹிருணிகாவுக்கு அழைப்பாணை

கொழும்பு, ஏப். 19

கல்கிசை நீதவான் வழங்கிய உத்தரவை விமர்சித்தமைக்காக, நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவை எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் அதற்கான காரணங்களை தெரிவிக்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

ஒரு பெண்ணைத் தாக்கும் சம்பவம் தொடர்பில் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மிலின் மகன் ஹார்டி ஜமால்தீன் தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தன்று பெண் ஒருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் ஊவா மாகாண ஆளுநரின் மகனுக்கு கல்கிசை நீதவான் பிணை வழங்கியதை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் விமர்சித்ததாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதிவாதியான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, நீதித்துறை பிறப்பித்த உத்தரவை விமர்சித்து நீதிமன்றத்தை அவமதித்ததாக முறைப்பாடு செய்தவர் குறிப்பிட்டதுடன், குற்றத்திற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார். (அ)

# இலங்கையின் பழங்கால ஒலிபெருக்கி சாதனங்களை கடத்தும் இந்தியர்கள்!

கொழும்பு, ஏப். 19

இலங்கையில் உள்ள பழமை வாய்ந்த ஒலிபெருக்கி சாதனங்களை கொள்வனவு செய்து, இந்தியாவுக்கு கொண்டு செல்லும் குழு தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளது.

பிரித்தானியர் ஆட்சிக்காலப்பகுதி மற்றும் அதை அண்டிய காலப்பகுதிகளில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட பழக்கால ஒலிபெருக்கி சாதனங்களை கொள்வனவு செய்வதற்காக இந்தியாவிலிருந்து பலர் இலங்கை வந்த வண்ணமுள்ளனர்.

இலங்கையிலுள்ள தரகர்களின் உதவியுடன் நாடு முழுவதும் திரிந்து இந்தவகை சாதனங்களை கொள்வனவு செய்து, அவற்றுக்கு வர்ணம் பூசிய பின்னர்,புதிய பொருட்களை போன்ற பாவனையில் விமான நிலையம் ஊடாக எடுத்துச் செல்கிறார்கள்.

கட்டுநாயக்க, பலாலி விமான நிலையங்கள் ஊடாக இவை எடுத்துச் செல்லப்பட்டு வருகின்றன.




இந்தவகை பொருட்களின் பெறுமதியை உணராத பலர், குறைந்த விலையில் அவற்றை விற்பனை செய்வது, இந்த குழுவுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. (அ)

# கனடா விமான நிலைய கொள்ளை; இலங்கைத் தமிழர் ஒருவரும் கைது!

ஒட்டாவா, ஏப். 19

கடந்த வருடம் பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் 400 கிலோகிராம் தங்கம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஒன்பது சந்தேக நபர்களில் எயார் கனடாவின் முன்னாள் மற்றும் தற்போதைய ஊழியர் ஒருவரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கனேடிய வரலாற்றில் மிகப்பெரிய தங்கத் திருட்டு தொடர்பாக ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் நான்கு பேர் குற்றச்சாட்டை எதிர்கொள்வதாகவும், திருட்டு நடந்து ஓராண்டு நிறைவடைந்ததையொட்டி புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் பொலிசார் உறுதிப்படுத்தினர்.

கைதானவர்களில் ஒருவர் இலங்கையை பூர்வீகமாக கொண்ட தமிழர்.

சந்தேகநபர்கள் மீது மொத்தம் 19 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், இதுவரை கைது செய்யப்படாத சந்தேக நபர்களில் மூவரைக் கைது செய்ய கனடா முழுவதும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கொள்ளைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கனேடிய வரலாற்றில் இது மிகப்பெரிய தங்கத் திருட்டு. உலகம் முழுவதிலும் ஆறாவது பெரிய தங்கத் திருட்டு என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ரொரண்டோ நகைக்கடைக்காரரும் கைது செய்யப்பட்டிருந்தார்.

பிரசாத் பரமலிங்கம் (வயது-35) என்ற தமிழரே கைது செய்யப்பட்டிருந்தார்.

பிரசாத் பரமலிங்கமும் அமெரிக்க அதிகாரிகளால் தேடப்பட்டு வருகிறார். அமெரிக்காவில் சிக்கிய துப்பாக்கிகளை வாங்கப் பயன்படுத்திய பணத்தை அவர் வழங்கியதாக பென்சில்வேனியாவிலுள்ள வழக்கறிஞர்கள் கூறுவதாக நீதிமன்ற ஆவணங்கள் காட்டுகின்றன. (அ)

# கிழக்கிலும் வெப்பம் உச்சம்!

## சில இடங்களுக்கு செம்மஞ்சள் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 19

**வெப்பமான வானிலை குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் செம்மஞ்சள் எச்சரிக்கையை விடுத்துள்ளது.**

இதன்படி, இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, வடக்கு, வடமத்திய, மேல், சப்ரகமுவ, கிழக்கு, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்தின் சில இடங்களிலும் வெப்ப நிலை அதிகரிக்கலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் மனித உடலால் உணரப்படும் வெப்பம் அவதானம் செலுத்த வேண்டிய மட்டத்தில் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குழந்தைகள் மற்றும் முதியவர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (அ)

# சிங்கள மொழி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



காரைதீவு, ஏப். 19

நீதி அமைச்சின் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் அனுசரணையுடன் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இளைஞர் யுவதிகளுக்கான 100 மணித்தியாலங்கள் கொண்ட சிங்கள மொழித் தொடர்பாடல் பயிற்சி பாடநெறியை பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் வழிகாட்டலின் கீழ் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. எஸ். நிருபா தலைமையில் தேசிய ஒருமைப்பாட்டு இணைப்பாளர் ஏ.ஆன்ஸி யுரேமினியின் ஒருங்கிணைப்பில் இந்த வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பாடநெறியின் வளவாளரான சுதேஷ் ருஷாந்தன் மற்றும் பாடநெறியை பூர்த்தி செய்த இளைஞர் யுவதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# ஏப்ரல் 10 நோன்புப் பெருநாள் தினத்தை விசேட விடுமுறையாக பிரகடனப்படுத்துக!

## அரசாங்க பொது சேவைகள் சங்கம் கோரிக்கை

அம்பாறை, ஏப். 19

முஸ்லிம்களின் புனித நோன்பு பெருநாள் தினமான ஏப்ரல் 10 ஆம் திகதியை இலங்கையில் விசேட லீவாக பிரகடனப்படுத்துமாறு இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.புஹாது பொது நிர்வாக உள்நாட்டு அலுவலர்கள் அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் அனைவரும் புனித ரமலான் நோன்பு பெருநாளை தமது மத கலாச்சார விழுமியங்களுக்கு அமைவாக ஏப்ரல் 10 ஆம் திகதி அனுஷ்டித்தனர்.

இத்தினம் அரச அலுவலக வேலை நாளாக உள்ளமையினால் குறித்த தினம் சொந்த விடுமுறையில் பெரு நாளை கொண்டாட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையை கருத்திற் கொண்டு இலங்கை முஸ்லிம்களின் புனித நோன்பு பெருநாள் தினமான ஏப்ரல் 10 திகதியை முஸ்லிம் அரச உத்தியோகத்தர்களுக்கு விசேட விடுமுறை தினமாக பிரகடனப்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# புணானை தொழில்நுட்ப பல்கலையில் களைகட்டியது புத்தாண்டு நிகழ்வு



மட்டக்களக்கு ஏப். 19

மட்டக்களப்பு, புணானை தொழில்நுட்ப பல்கலைக்கழக பூங்காவில் மூவினத்திவரும் ஒன்றிணைந்த மகிழ்ச்சியான புதுவருட கொண்டாட்டம் இடம்பெற்றது.

தமிழ் சிங்கள புத்தாண்டு மற்றும் புனித நோன்பு பெருநாள் விடுமுறைக்குப் பிறகு புதிய கல்வி ஆண்டை ஆரம்பித்து வைத்ததுடன், விரிவுரையாளர்கள், உத்தியோஸ்தர்கள், ஊழியர்கள் மற்றும் நிர்வாகிகள் இணைந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக துணைவேந்தர், உதவி துணை வேந்தர், பதிவாளர் என அனைவரும் பங்கேற்றனர். (அ)

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி விநியோகிப்பதற்கு முன்னாய்வு கூட்டம்

அம்பாறை, ஏப். 19

2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் நாட்டில் நிலவிய மிகவும் கடினமான பொருளாதார நிலைமைக்கு மத்தியில் பாதிப்புக்கு உள்ளான குறைந்த வருமானம் பெறும் குழுக்களின் ஊட்டச்சத்து மட்டத்தைப் பேணுவதற்கு ஆதரவு வழங்கி அந்த மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் முழு நாட்டையும் உள்ளடக்கும் விதமாக குறைந்த வருமானம் பெறும் சுமார் 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு 10 கிலோ கிராம் நாட்டு அரிசியை இரண்டு மாத காலத்திற்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ் வேலைத்திட்டம் தேசிய ரீதியாக எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.



சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் சுமார் 12000ற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு அரிசி விநியோகம் மேற்கொள்ளப்பட வுள்ளது.இது விடயமாக கிராம மட்ட உத்தியோகத்தர்களுக்கான தெளிவுபடுத்தும் முன்னாய்வு கூட்டம் நேற்று சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் யூ.எல் அஸ்லம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம், சமூர்த்தி முகாமையாளர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவகர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அரசி ஆலை உரிமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி அதிபர்களின் பெயர் பலகை திறப்பு

அம்பாறை, ஏப். 19

மஹ்மூத் மகளிர் கல்லூரியில் அதிபர்களாக கடமையாற்றியவர்களின் பெயர்கள் மற்றும் காலங்களை உள்ளடக்கிய ”மஹ்மூத் அதிபர் பெயர் பலகை” உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கும் நிகழ்வு கல்லூரியின் நிர்வாக கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் குறித்த பெயர் பலகையினை இக்கல்லூரியின் பழைய மாணவியும் தற்போதைய 17ஆவது அதிபரும் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் முதலாவது இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியுமான அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் திரை நீக்கம் செய்தார்.

இக்கல்லூரி வரலாற்றில் (1971-2024) இன்றுவரை 17 அதிபர்கள் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)



# 90 ஓட்டங்களுக்குள் சுருண்டது குஜராத் 8.5 ஓவர்களில் இலக்கை எட்டியது டில்லி

அகமதாபாத், ஏப். 19

89 ஓட்டங்களுக்கு முதல் இன்னிங்ஸ் முடிய 8.5 ஓவர்களில் இலக்கை எட்டி ஐ. பி. எல். தொடரில் ஒரு போட்டி முடிவுக்கு வந்தது.

நடப்பு ஐ. பி. எல். ரி - 20 கிரிக்கெட் தொடரில் டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு எதிராக நடந்த போட்டியில் 90 ஓட்டங்களுக்குள் சுருண்டது குஜராத் அணி.

அகமதாபாத்திலுள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணி, பந்து வீச்சை தெரிவு செய்தது. இதன்படி குஜராத் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய அணித் தலைவர் ஷூப்மன் கில் 8 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

அடுத்து விருத்திமான் சாஹா இரண்டு ஓட்டங்களில் வெளியேறினார். 5 ஆவது ஓவரில் சாய் சுதர்சன் 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதே ஓவரில் டேவிட் மில்லர் விக்கெட்டை பறிகொடுத்தார். இப்படியாக முதல் 6 ஓவர்களில் 4 விக்கெட்டை தாரைவார்த்த குஜராத் 30 ஓட்டங்களைச் சேர்த்தது. 6 ஆவது ஓவர் ஓட்டம் எதுவும் எடுக்கப்படவில்லை.

அபினவ் மனோகர் 8 ஓட்டங்கள், ஷாருக்கான் வந்த வேகத்தில் திருப்பினார். ராகுல் தெவாட்டியா 10 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

இந்த ஐ. பி. எல். தொடரின் மிக மோசமான ஆட்டமாக இது அமைந்தது. 15 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 78 ஓட்டங்களைச் சேர்த்திருந்து குஜராத் அணி.

ஆட்டத்தின் முதல் சிக்ஸரே 17 ஆவது ஓவரில் தான் எடுக்கப்பட்டது. 20 ஓவரில் 89 ஓட்டங்களுக்கு சுருண்டது குஜராத்.

டில்லி அணி தரப்பில் முகேஷ் குமார் 3 விக்கெட்டுகளையும், இஷாந்த் சர்மா, டிரிஸ்டன் ஸ்டப்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், கலீல் அகமது, அக்சர் படேல் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

90 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை டில்லி அணி விரட்டியது. பிரித்வி ஷா மற்றும் ஃப்ரேசர் மெக்குர்க் இன்னிங்ஸை ஆரம்பம் செய்தனர். தொடக்கம் முதலே இலக்கை விரைந்து எட்ட முயன்றது அந்த அணி. பவர்பிளே ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 67 ஓட்டங்கள் எடுத்திருந்தது டில்லி.



மெக்குர்க் 20, அபிஷேக் போரல் 15, ஷாய் ஹோப் 19, பிரித்வி 7 ஓட்டங்கள் எடுத்தனர். சுமித் குமார் 9 ஓட்டங்கள் மற்றும் பந்த் 16 ஓட்டங்கள் எடுத்து இறுதிவரை களத்தில் இருந்தனர்.

8.5 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 92 ஓட்டங்கள் எடுத்தது டில்லி. இதன் மூலம் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் டில்லி வெற்றி பெற்றது. கடந்த சில நாட்களாக நடந்த போட்டிகளில் 200 ஓட்டங்களுக்கு மேல் அணிகள் எட்டியிருந்தன. இது சென்னை - மும்பை, பெங்களூரு - ஹைதராபாத், ராஜஸ்தான் - கொல்கத்தா போட்டிகளில் பார்க்க முடிந்தது.

இந்த சூழலில் புதன்கிழமை நடந்த போட்டியில் மொத்தமாகவே 181 ஓட்டங்கள் மட்டுமே எடுக்கப்பட்டன. ஐ. பி. எல். கிரிக்கெட்டில் ஒரு போட்டியில் குஜராத் அணி எடுத்த மிகக் குறைந்த ஓட்டங்களாக டில்லியுடனான இந்தப் போட்டி அமைந்தது. இந்த வெற்றியின் மூலம் புள்ளிகள் பட்டியலில் 6 ஆவது இடத்துக்கு முன்னேறியது டில்லி அணி. (எ)

*சமரி 195 ஓட்டங்கள் குவித்து சாதனை*

# சம்பியன்ஷிப் கிரிக்கெட் போட்டியில் வரலாறு படைத்தது இலங்கை அணி

கேப்டவுன் , ஏப். 19

தென் ஆபிரிக்காவுக்கு எதிராக பொச்சேஸ்ட்ரூம் விளையாட்டரங்கில் புதன்கிழமை இரவு நடந்த மூன்றாவதும் இறுதியுமான ஐ. சி. சி. மகளிர் சம்பியன்ஷிப் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சாதனைகளுடன் இலங்கை 6 விக்கெட்களால் மகத்தான வெற்றியீட்டி வரலாறு படைத்தது.

இந்த வெற்றியுடன் 3 போட்டிகள் கொண்ட தொடரை 1 - 1 என இலங்கை சமப்படுத்தியது. அத்துடன் ஐ. சி. சி. சம்பியன்ஷிப் தொடருக்கான 2 புள்ளிகளைப் பெற்று 18 புள்ளிகளுடன் அணிகள் நிலையில் 7ஆம் இடத்துக்கு முன்னேறியது இலங்கை.

இப் போட்டியில் தென் ஆபிரிக்க அணித் தலைவி லோரா வூல்வார்ட் குவித்த 184 ஓட்டங்களை இலங்கை அணித் தலைவி சமரி அத்தப்பத்து குவித்த 195 ஓட்டங்கள் விஞ்சியதன் மூலம் இலங்கை அணி அசத்தல் வெற்றி பெற்றது.

மகளிர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்தின் அமேலியா கேர் 232 (ஆட்டம் இழக்காமல்), அவுஸ்திரேலியாவின் பெலிண்டா க்ளாக் 229 (ஆட்டம் இழக்காமல்) ஆகியோருக்கு அடுத்ததாக மூன்றாவது அதிகூடிய தனிநபர் எண்ணிக்கையாக சமரியின் ஆட்டம் இழக்காத 195 ஓட்டங்கள் அமைந்தது.

தென் ஆபிரிக்காவால் நிர்ணயிக்கப்படட 302 ஓட்டங்களைக் கடந்து வெற்றிபெற்றதன் மூலம் மகளிர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் மிகப் பெரிய வெற்றி இலக்கைக் கடந்த அணி என்ற சாதனையை இலங்கை படைத்தது. மகளிர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இதுவே ஒரே ஒரு 300 ஓட்டங்களுக்கு மேற்பட்ட வெற்றி இலக்காகும்.

நோர்த் சிட்னி மைதானத்தில் 2012 ஆம் ஆண்டு நியூஸிலாந்தால் நிர்ணயிக்கப்பட்ட 289 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை அவுஸ்திரேலியா கடந்திருந்ததே இதற்கு முந்தைய மிகப் பெரிய வெற்றி இலக்காக இருந்தது.

தென் ஆபிரிக்காவால் நிர்ணயிக்கப்பட்ட இமாலய வெற்றி இலக்கான 302 ஓட்டங்ளை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை 44.3 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து 305 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. இலங்கை மகளிர் அணி 300 இற்கும் மேற்பட்ட மொத்த எண்ணிக்கையைக் குவித்தது இதுவே முதல் தடவையாகும்.



ஆரம்பம் முதல் அதிரடியில் இறங்கிய சமரி அத்தபத்து, விஷ்மி குணரட்ன (26 ஓட்டங்கள்) ஆகிய இருவரும் 90 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை கொடுத்தனர்.

அத்தோடு சமரி அத்தபத்து, நிலக்ஷிகா சில்வா ஆகிய இருவரும் பிரிக்கப்படாத 5 ஆவது விக்கெட்டில் சாதனை மிகு 179 ஓட்டங்களைப் பகிர்ந்து இலங்கையின் வெற்றியை உறுதிசெய்தனர்.

இந்த இணைப்பாட்டமானது மகளிர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கையின் 5 ஆவது விக்கெட்டுக்கான அதிசிறந்த இணைப்பாட்டமாகும். சமரி அத்தபத்து 139 பந்துகளை எதிர்கொண்டு 26 பௌண்ட்ரிகளையும், 5 சிக்ஸர்களையும் விளாசியிருந்தார்.

128 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது சமரி அத்தபத்து கொடுத்த பிடியெடுப்பு வாய்ப்பை சுனே லுஷ் 32 ஆவது ஓவரில் தவறவிட்டார். அப்போது இலங்கையின் வெற்றிக்கு மேலும் 106 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அதனை சாதகமாக்கிக்கொண்ட சமரி அத்தபத்து, நிலக்ஷிகாவுடன் இணைந்து வெற்றியை உறுதிசெய்தார்.

நிலக்ஷிகா சில்வா நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி 71 பந்துகளில் பெண்ட்ரிகள் அடங்கலாக 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இலங்கை - தென் ஆபிரிக்கா இடையிலான முதலாவது போட்டி மழையால் கைவிடப்பட்டது. இரண்டாவது போட்டியில் தென் ஆபிரிக்கா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. 3 போட்டிகள் கொண்ட மகளிர் சர்வதேச ரி - 20 தொடரை 2 - 1 என்ற கணக்கில் இலங்கை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (எ)



# உலகக்கிண்ணத்தொடரில் டோனி விளையாடுவாரா?

முலான்பூர், ஏப். 19

ரி - 20 உலகக் கிண்ணத் தொடரில் எம். எஸ். டோனியை சமாதானப்படுத்தி விளையாட வைப்பது எளிதல்ல. டோனி மேற்கு இந்திய தீவுகள் வருவாரா? என்பது தெரியாது என்று இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா தெரிவித்தார்.

ஐ. பி. எல். ரி - 20 கிரிக்கெட் தொடரில் முலான்பூரிலுள்ள மகாராஜா யாதவேந்திர சிங் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பஞ்சாப் கிங்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் நேற்று மோதின. ரோஹித் சர்மாவுக்கு இது 250 ஆவது ஐ. பி. எல். போட்டியாகும். டோனிக்கு பிறகு 250 ஆவது ஐ. பி. எல். போட்டியில் விளையாடும் இரண்டாவது வீரர் ரோஹித் சர்மா தான்.

இந்த நிலையில் கில்கிறிஸ்ட் மற்றும் வாஹன் இணைந்து நடத்தி வரும் பாட்கேஸ்ட் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய ரோஹித் சர்மா பல்வேறு விஷயங்கள் பற்றிக் குறிப்பிட்டார். நடப்பு சீசனில் எம். எஸ். டோனி, தினேஷ் கார்த்திக் இருவரும் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய விதம் என்னைக் கவர்ந்தது.

இறுதி நான்கு பந்துகளில் விளையாட வந்து பெரிய தாக்கத்தை ஏற்படுத்தினார் டோனி. கடைசி நான்கு பந்துகளில் அவர் ஆடிய ஆட்டம் வித்தியாசமாக இருந்தது. ரி - 20 உலகக் கோப்பையில் டோனியை சமாதானப்படுத்தி விளையாட வைப்பது எளிதல்ல. அவர் சோர்வாகவுள்ளார். எனினும் டோனி மேற்கு இந்திய தீவுகள் வருவாரா? என்பது தெரியாது.

ஆனால், நிச்சயம் அமெரிக்கா வருவார் என்று நினைக்கிறேன். ஏனெனில், அண்மைக்காலங்களில் அதிகமாக கோல்ஃப் விளையாட்டில் ஆர்வமாக உள்ளார். அதனால் அமெரிக்கா வருவார் என்று நினைக்கிறேன். டோனியை சமாதானப்படுத்துவதை விடவும் தினேஷ் கார்த்திக்கை சமாதானம் செய்வது எளிது.

என்னை சிரிக்க வைக்க ரிஷப் பண்ட்டால் மட்டுமே முடியும். அவர் மிகவும் ஜாலியானவர். சிறிய வயதில் இருந்தே அவரை பார்த்து வருகிறேன். விபத்தால் ஒன்றரை வருடம் அவரால் கிரிக்கெட் விளையாட முடியாமல் போனது எனக்கு மிகுந்த வருத்தமளித்தது. ரிஷப் தற்போது மீண்டும் களத்துக்கு வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. ஜாலியாக இருக்க வேண்டும் என்றால் நான் ரிஷப் பண்ட்டை தான் அழைப்பேன். அவர் ஏதாவது பேசுவார், நாங்கள் அனைவரும் அதைக் கேட்டு சிரிப்போம்.- ரோஹித்.

# பளுதூக்கல் போட்டியில் தலைகீழான முடிவுகள்!

புக்கெட், ஏப். 19

தாய்லாந்தின் புக்கெட்டில் நடைபெற்ற 2024 சர்வதேச பளுதூக்கல் சம்மேளன உலகக் கிண்ண போட்டியானது உலக பளுதூக்கல் போட்டி வரலாற்றில் முன்னர் ஒருபோதும் கண்டிராத மிகப் பெரிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகப் பதிவானது.

இப்போட்டி பாரிஸ் 2024 ஒலிம்பிக் விளையாட்டு விழாவுக்கான தகுதிகாண் பளுதூக்கல் போட்டியாக அமைந்ததால் பெரும்பாலான பளுதூக்கல் போட்டியாளர்கள் என்ன விலைகொடுத்தேனும் ஒலிம்பிக் தகுதியைப் பெற்றுவிட வேண்டும் என்ற வைராக்கியத்துடன் பங்குபற்றினர்.

நினைத்துப்பார்க்க முடியாத பல முடிவுகள், பல தோல்விகள் ஆகியவற்றுக்கு மத்தியில் உலகக் கிண்ண பளுதூக்கல் போட்டியில் 15 உலக சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

ஒவ்வொரு எடைப் பிரிவிலும் முதல் 10 இடங்களைப் பெறுவதற்கு சகல போட்டியாளர்களுக்கும் வாய்ப்பு வழங்கும் வகையில் உலகக் கிண்ண பளுதூக்கல் போட்டி தீர்மானம் மிக்க தகுதிகாண் சுற்றாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

என்றாலும் ஒவ்வொரு எடைப் பிரிவிலும் ஒரே நாட்டைச் சேர்ந்த சகாக்களுக்கு இடையில் கடும் போட்டி நிலவியது. ஒவ்வொரு நாட்டினதும் தேசிய ஒலிம்பிக் குழு சார்பாக ஒரு போட்டியாளருக்கு மாத்திரமே ஒலிம்பிக்கில் பங்குபற்ற வாய்ப்பு வழங்கப்படுவதாலேயே இந்நிலை தோன்றியது.

கடந்த இரண்டு வருடங்களில் பளுதூக்கும் போட்டியாளர்கள் மிகப் பெரிய மொத்த எடைகளைத் தூக்கி அசத்தியிருந்தனர். ஆனால் உலகக் கிண்ணத்தில் அது மாறிப்போனது.

எதிர்பார்க்கப்பட்ட வீர, வீராங்கனைகள் கடைசிக் கட்டத்தில் தோற்றனர்.

ஒலிம்பிக் பளுதூக்கல் வரிசையில் முன்னிலையில் இருந்த பலர் கடைசிக் கட்டத்தில் தங்கள் சக வீரர்கள் - வீராங்கனைகளால் தோற்கடிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர். (எ)

# கோட்டாபயவினால் ஏமாற்றப்பட்டுள்ளேன்

## பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்



கொழும்பு, ஏப். 19

**கோட்டாபயவினால் நான் ஏமாற்றப்பட்டுள்ளேன் - பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்! முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வாக்குறுதியினால் தான் ஏமாற்றப்பட்டதாக, கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

நேற்று முன் தினம் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஆட்சிக்கு வந்த பின்னர் ஏப்ரல் -21 பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்படும் என, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தனக்கும் பேராயர் சபைக்கும் வாய்மொழியாக வாக்குறுதியளித்தார்

எவ்வாறாயினும், ஏப்ரல்- 21 பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர், அது தொடர்பான அனைத்து விசாரணைகளும் கைவிடப்பட்டதாக பேராயர் தெரிவித்துள்ளார். (அ)

# 2 வயோதிப பெண்களின் சடலங்கள் கண்டெடுப்பு!

கொழும்பு, ஏப். 19

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவிற்குற்பட்ட இசுரு உயன பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து இரு வயோதிபப் பெண்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவிற்குற்பட்ட இசுரு உயன பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து துர்நாற்றம் வீசுவதாக அயலவர்கள் அளித்த முறைப்பாட்டையடுத்து, அப்பகுதிக்கு வருகைத் தந்த பொலிஸார், குறித்த வீட்டை பரிசோதனை செய்துள்ளனர்.

இதன்போதே குறித்த சடலங்களைக் கண்டெடுத்துள்ளனர்.

65 மற்றும் 79 வயதுடைய இரண்டு வயோதிபப் பெண்களே இவ்வாறு இறந்த நிலையில் சடலங்களாக கண்டெடுக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வீட்டில் தனிமையில் வசித்த இந்த இரண்டு பெண்களும் கடந்த சில வாரங்களாக காணாமல்போயிருந்த நிலையில், இவர்கள் இருவரும் சில நாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலங்களை கைப்பற்றி, பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ள களுத்துறை தெற்கு பொலிஸார், இது இயற்கை மரணமா அல்லது கொலையா என்பது தொடர்பாக மரண பரிசோதனை அறிக்கைக்குப் பின்னரே கூறமுடியும் எனக் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# 15,000 ஏக்கர் நிலத்தில் நிலக்கடலைச் செய்கை!

கொழும்பு, ஏப். 19

எதிர்வரும் சிறுபோகத்தை அடிப்படையாகக் கொண்டு வறண்ட வலயத்தில் 15,000 ஏக்கரில் நிலக்கடலை பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக கூடிய விளைச்சலை தரக்கூடிய நிலக்கடலை விதைகளை பயன்படுத்த விவசாய திணைக்களம் தீர்மானித்துள்ளது.

குறைந்த நீர்ப்பாசன வசதிகளை கொண்ட வயல்களில் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன், அதற்காக விவசாயிகளை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# நாட்டுக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவோர் கைது

கொழும்பு, ஏப். 19

எமது நாட்டுக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சுற்றுலாத் துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் களுத்துறை மற்றும் அளுத்கடைப் பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளை மோசமாக நடத்துவது மற்றும் உணவுக்கு அதிக கட்டணம் வசூலிப்பது போன்ற இரண்டு சம்பவங்கள் குறித்து சமீபத்தில் வெளியான இரண்டு சம்பவங்கள் தொடர்பில் பதிலளிக்கும் வகையில் அவர் இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

சில நபர்கள் இதுபோன்ற அநாகரீகமான நடத்தையில் ஈடுபடுவது குறித்தும் அவர் கவலை தெரிவித்தார்.

அத்துடன் இவர்களின் செயற்பாடுகள் நாட்டின் நற்பெயருக்கு அச்சுறுத்தலாக உள்ளதாகவும், இதனை பொறுத்துக்கொள்ள முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# செவ்வாய் கிரகத்தின் ஆய்வுக்காக இலங்கையை சேர்ந்த விஞ்ஞானி!

கொழும்பு, ஏப். 19

செவ்வாய் கிரகத்தின் ஆய்வுக்காக நடத்தப்பட்ட ஆராய்ச்சிக்காக இலங்கை விஞ்ஞானி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன

ஹூஸ்டனில் உள்ள ஜான்சன் விண்வெளி மையத்தில் நாசாவால் கட்டப்பட்ட செவ்வாய் கிரகத்தின் சுற்றுச்சூழல் பண்புகள் கொண்ட ஒரு வாழ்விடத்தில் தொடர்புடைய பணி மேற்கொள்ளப்படுகிறது.

இதில் நான்கு பேர் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்கள் மே 10 ஆம் திகதி நாசாவின் "மனித ஆய்வு ஆராய்ச்சி அனலாக்" பணி பகுதிக்குள் நுழைய திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதிலிருந்து 45 நாட்கள் விண்வெளி வீரர்களாக பணியாற்றுவார்கள் என்று நாசா அறிவித்துள்ளது.



அத்துடன் விண்வெளி வீரர்களை சந்திரன், செவ்வாய் மற்றும் விண்வெளியின் பிற பகுதிகளுக்கு அனுப்புவதற்கு முன், அவர்களுக்கு தேவையான பூர்வாங்க பயிற்சி வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதுடன்

இதன்மூலம் விண்வெளி வீரர்கர் தேவையான அறிவைப் பெறும் வாய்ப்பையும் அவர்கள் பெறுவார்கள் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த குழுவிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இலங்கை விஞ்ஞானி பியுமி விஜேசேகர, கலிபோர்னியாவில் உள்ள நாசா அமெஸ் ஆராய்ச்சி மையத்தில் உள்ள கதிர்வீச்சு உயிரியல் இயற்பியல் ஆய்வகத்தில் ஆராய்ச்சி விஞ்ஞானியாக பணியாற்றி வருகிறமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# 17 வயது மகளை ஐந்து வருடங்களாக துஷ்பிரயோகம் செய்த தந்தை கைது!

கொழும்பு, ஏப். 19

மனைவி உயிரிழந்ததையடுத்து தனது 17 வயது மூத்த மகளை 5 வருட காலமாக பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் தந்தை இங்கிரிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பொலிஸாரால் தேடப்பட்டு வரும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவரது மனைவி 6 வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளதாகவும் இதனையடுத்து இவர் தனது மூத்த மகளை சுமார் 5 வருட காலமாகப் பலமுறை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபருக்கு மூன்று பெண் பிள்ளைகள் உள்ள நிலையில் அவர் தனது இரண்டாவது மகளையும் பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற போது அதனைக் கண்ட மூத்த மகள் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனது இரண்டாவது மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சந்தேக நபருக்கு எதிராக அவிசாவளை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் சந்தேக நபர் குறித்த வழக்கு தொடர்பில் நீதிமன்றில் ஆஜராவதைத் தவிர்த்து வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சந்தேக நபரின் ஒரு பிள்ளை சுகயீனமடைந்துள்ளதுடன் சுகயீனமடைந்த பிள்ளையை தன்னால் பராமரித்துக் கொள்ள முடியாததால் இவர், தனது பிள்ளையை உயிரிழந்த மனைவியின் சகோதரியின் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

பின்னர் வீட்டின் உரிமையாளரான உயிரிழந்த மனைவியின் சகோதரி மூன்று பிள்ளைகளையும் இங்கிரிய பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபரான தந்தை கைது செய்யப்பட்டுள்ளதாக இங்கிரிய பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# பாலிதவின் நல்லடக்கம் இன்று!

கொழும்பு, ஏப். 19

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெருமவின் இறுதிக் கிரியைகள் இன்று மதுகம கரம்பேதர பகுதியில் இடம்பெறவுள்ளன.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பாலித தெவரப்பெரும கடந்த 16 ஆம் திகதி பிற்பகல் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தார்.

பிரேத பரிசோதனையை அடுத்து, அன்னாரின் உடல், அவரது உறவினர்களிடம் நேற்று முன் தினம் கையளிக்கப்பட்டிருந்த நிலையில் அவரது உடல் அவரது வீட்டில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அவரது உடலுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த உள்ளிட்ட அரசியல்வாதிகள் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் மறையையொட்டி, அவரது பிரதேசத்தின் பல இடங்களில் மரண அறிவித்தல் காட்சிப் படுத்தப்பட்டுள்ளதோடு, வெள்ளைக் கொடிகளையும் பறக்கவிட்டு, பொது மக்களின் தங்களின் சோகத்தை வெளிப்படுத்திய வண்ணம் உள்ளனர்.

இலங்கை அரசியல் வரலாற்றில் இன- மத- மொழி பேதம் கடந்து அனைவராலும் நேசிக்கப்பட்ட ஒரு அரசியல்வாதியாக கருதப்பட்ட பாலித தெவரப்பெருமவின் இறுதிக் கிரியைகள் இன்று மதுகம- கரம்பேதர பகுதியில் இடம்பெறவுள்ளன.

தனது இறுதிக் கிரியைகளுக்காக தானே அமைத்துக் கொண்ட மயானத்திலேயே இன்று அன்னாரின் உடல் அடக்கம் செய்யப்படவுள்ளது. (அ)

## யாழிலிருந்து...

பின்னர் நள்ளிரவு வேளை திருகோண மலைக்குக் கொண்டுசெல்லப்படுகிறது.

இந்த செயல்பாட்டுக்கு யார் அனு மதி வழங்கியது? சுண்ணக் கற்களை அகழ்வதற்கு எந்தத் திணைக்களம் பொறுப்பு கூறுவது. இராணுவம், பொலிஸாரின் அனுமதியுடன் இது நடைபெறுகிறதா? யார்தான் பொறுப்பு கூறுவது?

12 முதல் 14 டிப்பர் வாகனங்களில் கற்களை கொண்டு செல்கிறார்கள். நள்ளிரவில் இந்த வேலைகள் நடப்ப தால் இரவுநேர காவல் பணியில் இருக் கும் பொலிஸ், இராணுவம் சுண்ணக் கற்களை கொண்டு செல்ல அனுமதி வழங்குகின்றனவா?

ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் வடக்கு ஆளுநரும் அமைச்சர் ஒருவரும் இணைத் தலைவர்களாக உள்ளனர். இந்த விடயத்தில் யாரால் இந்த செயல் பாடு நடைபெறுகிறது. இதனை நிறுத்து வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார்.

இது தொடர்பில் பொலிஸார், இராணுவத்தினரிடம் வினவிய வடக்கு ஆளுநர் இரவுவேளை பயணிக்கும் டிப் பர்களை சோதனையிட்டு - உரிய அனு மதிகளை சோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். (எ)

## குழாய்க்...

சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் கூட்டத்தில் வாத பிரதிவாதங்கள் எழுந்தன. இதையடுத்து குழாய் கிணறு அமைப்பதால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் ஆய்வு நடத்தி அதன் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்துவது தொடர்பிலும் நட வடிக்கை எடுப்பது என்று தீர்மானிக் கப் பட்டது. (ஐ)

## இறையாண்மை...

என நிதி அமைச்சு அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித் திருந்தது.

இதனிடையே, இலங்கையின் ஆயிரத்து 250 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான இறையாண்மை பத்திரங்களை மே மாத நடுப் பகுதிய ளவில் மறுசீரமைப்பதற்கான இயலுமை கிடைக்கும் என்று இறையாண்மை பத்திர உரிமையாளர்களை பிரதிநிதித் துவப்படுத்தும் தரப்பான ஸ்ராண்டர்ட் சார்ட்டட் ஆய்வு நிறுவனத்தை மேற் கோள் காட்டி ப்ளூம்பேர்க் இணையம் கூறியுள்ளது.

கடன் வழங்குநர்கள் முன்வைத்துள்ள மைக்ரோ லிங் பொண்ட் ( Micro Link Bond) முறைமையே, இறையாண்மை பத்திர மறுசீரமைப்பை ஏற்படுத்துவதற் கான பிரதான தடையாகக் காணப்படுவ தாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள் ளது.

இந்த நடைமுறைக்கு அமைய, பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட பொருளாதார முன்னேற்றங்களின் அடிப்படையில், இறையாண்மை பத்திர உரிமையாளர்களுக்கான நன்மைகள் தீர்மானிக்கப்படும்.

எவ்வாறாயினும், இணக்கப்பாடு தாமதமடைகிறது. இது இந்த ஆண்டில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தல் வரை தாமத மாகலாம், இது குறித்து அவதானம் செலுத்தப்படுவது அவசியம் என்று பொருளாதார நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதன் காரணமாக, இறையாண்மை பத்திர மறுசீரமைப்பு தொடர்பிலான இணக்கப்பாட்டை விரைவுபடுத்துவதன் முக்கியத்துவத்தை அவர்கள் வலியுறுத் தியுள்ளனர். (ஐ)

## புங்குடுதீவில்...

இந்த எலும்புக் கூடு மீட்கப்பட்டது.

புங்குடுதீவு மருத்துவமனைக்கு அண்மையாக கடற்கரையை அண்டியே இந்த எலும்புக்கூடு மீட்கப்பட்டது. இந்த எலும்புக்கூடு பழமையானது என்று கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில், ஊர்காவற் றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## தமிழ் அரசு...

தொடரப்பட்ட வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளதால் அதற்கு முன்ன தாக வழக்கு விடயங்களைக் கையாள் வது தொடர்பில் ஏகோபித்த நிலைப் பாட்டை எடுப்பதற்கு முனைவதாக கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராசா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் மட் டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை சாதக மாகப் பரிசீலிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

இந்நிலையில், இது குறித்த உறுதி யான முடிவும் இந்தக் கூட்டத்தில் எட்டப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. (எ)

## அன்னை...

ஆலயத்தில் மோட்ச அர்ச்சனை நடைபெற்று வழிபாட்டுடன் நினை வேந்தல் காலை 9 மணியளவில் ஆரம்ப மாகும்.

தொடர்ந்து, யாழ்ப்பாணம் - நல்லூர் திலீபன் நினைவிடத்தில் இருந்து சென்ற அன்னைபூபதி நினைவூர்தி நேற்று மாமாங்கத்தை வந்தடைந்தது. இந்த நினைவூர்தி பல இடங்களுக்கும் பய ணித்து பிற்பகல் 4 மணிக்கு கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலயத்தை வந்தடையும்.

பின்னர் அங்கிருந்து, நாவலடியி லுள்ள அன்னை பூபதியின் நினைவுத் தூ பிக்கு ஊர்வலம் செல்லும் என்று அன்னை பூபதி ஊர்தி ஏற்பாட்டா ளர்களான தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியினர் அறிவித்துள்ளனர்.

**நல்லூரில்...**

யாழ்ப்பாணத்தில் அன்னை பூபதி நினைவேந்தல் இன்று காலை 9.30 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவுத் தூபியில் நடை பெறவுள்ளது.

அன்னை பூபதியின் நினைவேந்தலை முன்னிட்டு கிளிநொச்சியில் அடையாள உண்ணா விரத போராட்டம் நடை பெறும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி கிளை அறிவித் துள்ளது. இந்த அடையாள உண்ணா விரத போராட்டம் காலை 8 மணி முதல் கிளிநொச்சி சேவை சந்தைப் பகுதியில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப் பட்டது.

**பின்னணி**

அன்னை பூபதி இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக, உடனடியாக போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்த வேண்டும், புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும் என்ற இரு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 1988 மார்ச் 19ஆம் திகதி உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தார்.

மட்டு. - அம்பாறை அன்னையர் முன்னணி சார்பில் முன்னெடுக்கப்பட்ட இந்த உண்ணாவிரதப் போராட்டம் மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங் கேஸ்வரர் ஆலய முன்றலில் நடை பெற்றது. தண்ணீரை மட்டுமே அருந்தி தொடர்ந்த இந்த உண்ணாவிரத போராட்டத்தில் அவரின் கோரிக்கை கள் நிறைவேற்றப்படாத நிலையில் 1988 ஏப்ரல் 19ஆம் திகதி உயிர் நீத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சுதந்திரக் கட்சியின் தலைவராக ரணில்!

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

கொழும்பு, ஏப். 19

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் உத்தி யோகபூர்வமற்ற தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டே அமைச்சு பதவிகளை வகிக்கும் சுதந்திர கட்சி உறுப்பினர்கள் தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் பணி மனையில் நேற்று அவர் நடத்திய செய்தி யாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க சிறீ லங்கா சுதந்திர கட்சியின் உத்தியோகபூர்வமற்ற தலைவராக உள்ளார். சுதந்திர கட்சியின் தலைவர் பதவியில் நீடிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நீதிமன்றத்தால் இடைக்கால தடை யுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொண் டுள்ள சுதந்திர கட்சியின் அமைச்சர்களே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக செயல்படு கிறார்கள்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் காலத்திலிருந்து ஒவ்வொரு அரசாங்கத்திலும் அமைச்சு பதவிகளை வகித்தவர்களாவர்.

எமது நல்லாட்சி அரசாங்கத்திலும் அவர்கள் அமைச்சு பதவிகளை வகித்துள்ளனர். இவர்கள் அண்மையில் அரசியல் குழு கூட்டத்தை நடத்தி புதிய நியமனங்களையும் வழங்கியுள்ளனர். இறுதியில் தற்போதைய ஜனாதிபதி சுதந்திர கட்சியின் தலைவரான பின்னரே இந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும் - என்றார். (ஐ)

# மே தினம் வரைதான் பிரிவு அதன் பின் புதிய கூட்டணி!

## ஐ. தே. க. விசேட அறிவிப்பு

கொழும்பு, ஏப். 19

எதிர்வரும் மே தினத்துக்குப் பின்னர் அரசியல் கூட்டணியொன்றை அமைப் பதற்கு எதிர்பார்த்துள்ளோம். கூட்டங் களைத் தனித்தனியே நடத்தினாலும் மே தினத்துக்குப் பின்பு காட்சிகள் மாறும். - இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினரு மான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை யகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மே லும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை சிறந்த முறையில் வழி நடத்துகிறார். அவர் மீது சர்வதேச நாடு களும் நம்பிக்கை வைத்துள்ளன. பாரிஸ் கிளப், லண்டன் கிளப் ஆகியவற்று டனும் பேச்சுகள் நடைபெறுகின்றன.

அந்த அமைப்புகளிடமிருந்து சாத கமான பதில்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். வரிசைகள் எதுவும் இல்லாமல் தமிழ் - சிங்கள புத்தாண்டு பண்டிகையை கொண்டாடக்கூடிய சூழ்நிலையை ரணில் விக்கிரமசிங்கவே ஏற்படுத்தினார். இதனை நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

நடைமுறையில் வெளித்தோற்றத்தில் காணப்படுகின்ற சக்திகளுக்கும் யதார்த் தத்துக்கும் இடையில் வித்தியாசம் உண்டு. மக்களின் சுபீட்சமான எதிர் காலத்துக்காக தன்னை அர்ப்பணிக்கக் கூடிய தலைவராக ரணில் விக்கிரமசிங்க விளங்குகிறார்.

எதிர்வரும் மே தினத்துக்குப் பின்னர் கூட்டணியாக செயல்பட எதிர்பார்த் துள்ளோம். மே தினக் கூட்டங்களை தனித்தனியாக நடத்தவுள்ள போதிலும் அதன் பின்னர் ஒன்றுசேர எதிர்பார்த் துள்ளோம் - என்றார். (எ)

## பாடசாலை...

மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தரும் போதும், வீடு செல்லும் போதும் விபத்துகளுக்கு உள்ளாகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்தே, பாடசாலை நேரங்க ளில் கனரக வாகனங்கள் பயணிக்கத் தடை விதிப்பது என்று முடிவு எடுக்கப் பட்டுள்ளது. (அ - ஐ)

## இந்திய...

தமிழ்நாடு மாநிலத்தில் 39 தொகுதிக ளிலும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஒரேயொரு தொகுதியிலும் இன்றைய தினமே வாக்குப் பதிவு நடைபெற வுள்ளது.

இதுதவிர, அருணாச்சலப் பிரதேசம், அசாம், பீகார், சத்தீஷ்கர், மத்திய பிர தேசம், மகாராஷ்டிரா, மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, ராஜஸ்தான், சிக்கிம், திரிபுரா, உத்தரப் பிரதேசம் , உத்தராகண்ட், மேற்குவங்கம் மாநிலங்களிலும் அந்தமான், நிக் கோபார், ஜம்மு - காஷ்மீர், இலட்சத்தீவு ஆகிய யூனியன் பிரதேசங்களிலும் முதல் கட்ட வாக்குப் பதிவு நடைபெறும்.

தமிழ்நாட்டில் தேர்தலுக்காக 44 ஆயிரத்து 800 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கமெரா மூல மும் அனைத்துத் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களும் கண்காணிக்கப்படவுள் ளன. அத்துடன், நாடு முழுவதும் பாது காப்பு பணிகள் பல மடங்கு அதிகரிக்கப் பட்டுள்ளன. (ஐ)

## விஷகடியால்...

உடல்நிலை மோசமானதும் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார்.

எனினும் நேற்று முன்தினம் நோயா ளிக்கு வலி தீவிரமடைந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (எ)

## ஈஸ்டர்...

மேற்பட்டவர்கள் உயிரிழந்தும் 500 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந் தும் உள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதல்களின் சூத்திரதாரி களை கண்டறிந்து அவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பார்கள் என நாம் இவ்வளவு வருடம் காத்திருந் தோம். ஆனால், பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு இதுவரை நீதி பெற்றுக்கொடுக் கப்படவில்லை. குற்றவாளிகள் அடை யாளம் காணப்படவுமில்லை. குற்ற வாளிகள் அல்லது சூத்திரதாரிகள் உயர் மட்ட அரசியல் சக்திகளால் பாதுகாக்கப்படுவதாகவே தெரிகிறது.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக தமது ஆட்சியில் விரிவான விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளதாக கொழும்பு பேராயர் ஊடக சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார். நாம் அதனை இன்று (நேற்று) எழுத்துபூர்வமாக கையளிப்பதற்காகவே ஆயரை சந்தித் திருந்தோம். தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் ஈஸ்டர் தாக்குதலின் சூத்திர தாரிகள் மற்றும் தாக்குதலுடன் தொடர்புடையவர்களுக்கு குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் - என்றார். (அ-ஐ)

ஈழநாடு
Eelanadu

# வடக்கில் 60 ஆயிரம் பேருக்கு காணி உறுதி வழங்க ஏற்பாடு!

## மாகாண ஆளுநர் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 19

**"மே மாத இறுதிக்குள் வடக்கில் 60 ஆயிரம் பேருக்கு காணி உறுதி வழங்கப்படும்" என வடமாகாண ஆளுநர் திருமதி பி. எம். எஸ். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த வருட இறுதிக்குள் மீள் குடியேற்ற நடவடிக்கை நிறைவு செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி வழங்கியுள்ள பணிப்புரைக்கு அமைய, மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 500 குடும்பங்களை சேர்ந்தவர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். அவர்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் விசேட கூட்டம் நடத்தப்பட வேண்டும். அத்துடன் ஏற்கனவே மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வீடுகளுக்கான மின்சார விநியோகம் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்குமாறு துறைசார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வீட்டுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் திட்டமிடல்கள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இந்த திட்டத்தில் நெடுந்தீவு மக்களுக்கான 76 வீடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன - என்றார். (அ)



அன்னை பூபதி உண்ணாநோன்பிருந்த மட்டக்களப்பு மாமாங்கப்பிள்ளையார் கோவில் வளாகத்தில் அன்னையின் மகள் சாந்தியால் சுடரேற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

# கடலில் குழந்தை பிரசவித்த பெண்!

## நயினாதீவில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாணம் - நயினாதீவைச் சேர்ந்த பெண்ணொருவர் கடலில் குழந்தை பிரசவித்துள்ளார்.

நயினாதீவைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு நேற்று முன் தினம்புதன்கிழமை திடீரென பிரசவ வலி ஏற்பட்டதை அடுத்து நயினாதீவு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றுமாறு வைத்தியர் பரிந்துரைத்தார். அதனையடுத்து போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு, அம்புலன்ஸ் படகு தற்போது சேவையில் ஈடுபடாததால், பொதுமக்கள் போக்குவரத்து படகில் ஏற்றி குறிகாட்டுவான் நோக்கி அழைத்து வந்துள்ளனர்.

இந்நிலையில் கடலில் படகு பயணித்துக்கொண்டிருந்த வேளை பிரசவ வலி பெண்ணுக்கு அதிகரித்ததை அடுத்து படகின் கீழ் தளத்தில் இருந்த ஆண்களை மேல் தளத்திற்கு அனுப்பி வைத்த பின்னர் படகில் பயணித்த பெண்களே பிரசவம் பார்த்துள்ளனர்.

படகு குறிகட்டுவான் இறங்குதுறையை வந்தடைந்ததும், அங்கு தயார் நிலையில் நின்ற புங்குடுதீவு வைத்திய சாலையின் நோயாளர் காவு வண்டியில் தாயையும் சேயையும், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர்.

தற்போது தாயும் சேயும் நலமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# ஓமான் வளைகுடாவில் மூழ்கிய கப்பலில் மீட்கப்பட்ட இலங்கையருக்கு சிகிச்சை

கொழும்பு, ஏப். 19

ஓமான் வளைகுடாவில் மூழ்கிக் கொண்டிருந்த கப்பலில் இருந்த இலங்கையர்களில் ஐவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என ஈரான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கப்பலிலிருந்து மீட்கப்பட்ட மற்றையவர்கள் நலமாக உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஓமான் வளைகுடாவில் ஏற்பட்ட புயலில் சிக்கி விபத்திற்குள்ளான கப்பலில் இருந்த 21 இலங்கை பணியாளர்கள் ஈரான் அவசர படையினரால் நேற்று முன் தினம் மீட்கப்பட்டனர்.

குக் தீவுகளின் கொடியுடன் எண்ணெய் ஏற்றிச்சென்ற கப்பல், ஈரானின் தெற்கு நகரமான ஜாஸ்கில் இருந்து சுமார் 50 கிலோமீற்றர் ஆழத்தில் கவிழ்ந்துள்ளதாக ஈரான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# பாதாள உலகக் குழுக்களை சேர்ந்த மேலும் 11 பேர் கைது!

கொழும்பு, ஏப். 19

பாதாள உலக செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 குழுவினரால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பின்போது பாதாள உலக குழுக்களைச் சேர்ந்தவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை பேணியதாகக் கூறப்படும் 16 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் வட பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மோதரை மற்றும் குளியாப்பிட்டிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 36 , 37 மற்றும் 48 வயதுடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ரணால ,அங்கொடை மற்றும் வெல்லம்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 42, 25, 49 மற்றும் 38 வயதுடைய நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அலுபோமுல்ல பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய சந்தேக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மிட்டியாகொட மற்றும் ஹங்வெல்ல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 33 மற்றும் 25 வயதுடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலக குற்றக் குழுக்களைச் சேர்ந்த 466 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# சுயதொழில் செய்பவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஏப். 19

சுயதொழில் செய்பவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என சமூக வலுவூட்டல் துறை இணையமைச்சர் அனுபா பாஸ்குவல் தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டம் ஏற்கனவே நிதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்

இதன்படி 12 இலட்சம் பேர் இதன் மூலம் நன்மை அடைவார்கள் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# வறட்சியால் 11,413 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஏப். 19

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலையால் 3, 646 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 413 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவான குடும்பங்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 487 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 461 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேநேரம், வறட்சியான காலநிலை காரணமாக கேகாலை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 813 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 949 பேரும், பதுளை மாவட்டத்தில் 190 பேரும், பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

# கட்டுத்துப்பாக்கி வெடித்து குடும்பஸ்தர் ஒருவர் காயம்!

முல்லைத்தீவு, ஏப். 19

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு கைவேலி மயில்குஞ்சன் பகுதியை சேர்ந்த 33 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

குறித்த நபர் தமது வீட்டிலிருந்து தேவிபுரம் பகுதியிலுள்ள காட்டுப் பகுதியால் சென்றபோது விலங்குகளை வேட்டையாடுவதற்காக பயன்படும் கட்டுத்துவக்கு வெடித்துள்ளது.

இதனால் காயமடைந்த அவர் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (அ)

# இந்திரா காந்தி இலங்கைக்கு கச்சதீவைக் கொடுத்தது சரி!

## கூறுகிறார் ஆனந்தசங்கரி

கிளிநொச்சி, ஏப். 19

இந்திரா காந்தி கச்சதீவை இலங்கைக்கு வழங்கியமை சரியான முடிவென தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்திரா காந்தி கச்சதீவை இலங்கைக்கு கொடுத்தது சரியான முடிவு. பிழையான விடயத்தை இந்திராகாந்தி செய்யமாட்டார்.

ஆரம்பத்தில் கச்சதீவை ஒருவரும் தேடவில்லை. ஆரம்பத்தில் இலங்கை நெடுந்தீவு மீனவர்களும், இந்திய மீனவர்களும் கச்சதீவுக்கு சென்றுவருவது வழமை.

எனினும் சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த காலத்தில் அவர், விடுதலைப்புலிகளால் பாதிப்பு ஏற்படும் எனத் தெரிவித்து இந்தியப் பிரதமரிடம் விடுத்த கோரிக்கைக்கு இணங்கவே கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது.

பொதுவேட்பாளர் என்று சொல்பவர்கள் 2004ம் ஆண்டு 26ஆசனங்கள் வைத்திருந்தபோது இனப்பிரச்சனையை தீர்த்திருக்க முடியும். மக்கள் இறக்கின்ற போது வாய் திறக்காதவர்கள் இப்பொழுது பொதுவேட்பாளர் பற்றிப் பேசுகின்றனர்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மத்திய கிழக்கில் ரஷ்ய வகிபாகம்: ஈரான் -இஸ்ரேல் போரில் நடுநிலைமை?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

மத்திய கிழக்கைப் பொருத்த வரையில், இந்தப் பிராந்தியம் பல முகங்களைக் கொண்டது. மதப் பிரிவினைகள், நம்பிக்கையின்மை, வெறுப்பு போன்றவை அதிகம் நிறைந்தது. தற்போது இஸ்ரேல் - ஈரான் போர் தீவிரமாகும் சூழ்நிலையில் சமரசம் ஏற்படுத்தும் சக்தியாக ரஷ்யா தலை எடுக்குமா என்பது பற்றி அரபுலகும், ஆசிய நாடுகளும் எதிர்பார்க்கின்றன.

இஸ்ரேல் - ஈரான் இருநாடுகளுடன் பரஸ்பர உறவை ரஷ்யா கொண்டிருந்தாலும், சமரச முயற்சிக்கு ரஷ்யா தலையிடுவது சாத்தியமற்றதாகவே புலப்படுகிறது.

உண்மையில் அமைதியை நிலைநாட்டுவதில் தனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமானால், ரஷ்யாவுக்கு சமநிலையிலான ராஜதந்திர பலம் போதுமானதாக இருக்காது என்றே கருதப்படுகிறது.

மத்திய கிழக்கில் நீண்டகால பிணக்குகளால் மாஸ்கோ பயனடைகிறது என்றும் வாதிடப்படுகிறது. தற்போதய போர் முரணில் இஸ்ரேல் - ஈரான் முனைப்புப் பெற்று இருக்கையில் மேற்கத்திய கவனத்தை ரஷ்யா உக்ரேனிலிருந்து திசை திருப்புமா எனவும் ஊகிக்கலாம். இஸ்ரேல் - ஈரான் மோதல் ஒரு பரந்த போராக விரிவடையும் பட்சத்தில், இப்பிராந்தியத்தில் பெரும் இழப்பை சந்திக்க நேரிடும்.

**மத்திய கிழக்கில் சமரசம் செய்யும் சக்தி:**

தற்போது மத்திய கிழக்கில் போரியல் மாற்றம் வெளிப்படையாகத் தெரிகிறது. 2015இல் சிரியாவில் ராணுவ நடவடிக்கைகளை மாஸ்கோ தொடங்கிய பின்னர், இந்தப் பிராந்தியத்தில் முக்கிய சக்தியாக அமெரிக்காவுக்குப் பதிலாக ரஷ்யா உருவாகியது. அத்துடன் இந்தப் பிராந்தியத்தில் அதிகார சமரசம் ஏற்படுத்தும் சக்தியாகவும் மாறியது.

கடந்த பல ஆண்டுகளாக மேற்கு நாடுகளும் நேட்டோவும் மத்திய கிழக்கில், மாஸ்கோ அரசை பலவீனப்படுத்த முயற்சி செய்தன. அரபு நாடுகளுக்கு இடையில் உள்ளக் கருத்து வேறுபாடுகளைப் பயன்படுத்தி இந்த முயற்சியில் நேட்டோ ஈடுபட்டது.

அதேவேளை சிரியா பிரச்சினையில் துருக்கிக்கும், மற்ற நேட்டோ உறுப்பு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட உரசல், ரஷ்யாவுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது. அப்போது நேட்டோவுக்குள் பிளவை உருவாக்க மாஸ்கோ முயன்றது. ரஷ்யாவிடம் இருந்து எஸ்-400 ரக வான்பரப்பு பாதுகாப்பு ஏவுகணைகளைத் துருக்கி வாங்கியது குறித்து ஏற்கெனவே அமெரிக்கா அதிருப்தியில் உள்ளதும் அறிந்ததே.



**ரஷ்யாவின் செல்வாக்கு வீழ்ச்சி:**

உக்ரேனிய போரின் பின்னர், மத்திய கிழக்கில் ரஷ்யாவின் செல்வாக்கு குறைந்த அறிகுறிகள் தெரிகின்றன. தற்போது இஸ்ரேல்- ஈரான் போரை ஒரு பரந்த பிராந்திய மோதலாகவும், வல்லரசுகளுக்கு இடையே நேரடி மோதலுக்கும் கூட வழிவகுக்கும் என்ற அச்சம் அதிகமாக உள்ளது.

ஏப்ரல் மாத தொடக்கத்தில் சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் மூன்று ஐசுபுஊ-ஞகு ஜெனரல்கள் மற்றும் நான்கு ஈரானிய இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டனர். ஈரான் பதிலடி கொடுக்கும் என எதிர்பார்க்கப்பட்டு, பாரிய ஏவுகணை தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

அத்துடன் இஸ்ரேல் தண்டிக்கப்படும் என்று உச்ச தலைவர் அயதுல்லா கமேனி சபதம் செய்துள்ளார். அதே நேரத்தில் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இஸ்ரேலின் தாக்குதலுக்கு பதில் இல்லாமல் போகாது என்றும் கூறியுள்ளார்.

**சிரியாவில் கால் பதித்த ரஷ்யா:**

சோவியத் சிதைவின் பின்னர், ரஷ்யா கடந்த தசாப்தத்தில் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தனது செல்வாக்கை சிறிது சிறிதாக உயர்த்திக் கொண்டது. பெரும்பாலும் உள்ளூர் மோதல்களைப் பயன்படுத்திக் கொண்டது. இது சிரியாவில் மிகத் தெளிவாகத் தெரிந்தது. அங்கு




> **ரஷ்யா பரஸ்பர உறவை இஸ்ரேல் - ஈரான் இருநாடுகளுடன் கொண்டிருந்தாலும், சமரச முயற்சிக்கு தலையிடுவது சாத்தியம் அற்றதாகவே புலப்படுகிறது. உண்மையில் அமைதியை நிலைநாட்டுவதில் தனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமானால், ரஷ்யாவுக்கு ராஜதந்திர பலம் போதுமானதாக இருக்காது என்றே கருதப்படுகிறது**




நிகழ்ந்த உள்நாட்டுப் போரை ரஷ்யா பயன்படுத்திக் கொண்டது. அத்துடன் சிரியாவில், ரஷ்ய தலையீடு 2015 இல் அசாத் ஆட்சியை உடனடி அழிவில் இருந்து காப்பாற்றியது.

பின்னர் ரஷ்யா தனது கால்தடத்தை சிரியாவில் விரிவுபடுத்தியதும் உண்மையே. அத்துடன் அதனது இராணுவத்தின் நிரந்தர இருப்பை நிறுவியது. 2019 இல் சிரியாவில் இருந்து அமெரிக்கா வெளியேறிய பிறகு, ரஷ்யா அந்த வெற்றிடத்திற்குள் நுழைந்தது.





சிரிய அரசாங்கப் படைகள் நாட்டின் வடகிழக்கு பகுதியின் கட்டுப்பாட்டை மீண்டும் பெற ரஷ்யா பாரியளவில் உதவியது. அதே ஆண்டு, ரஷ்யா எகிப்துடன் கூட்டு கடற்படை பயிற்சிகளை நடத்தியது. அந்த ஆண்டின் தொடக்கத்தில் எகிப்தில் ரஷ்யாவால் கட்டப்பட்ட அணுமின் நிலைய கட்டுமானம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளின் தொடர்ச்சியான வளர்ச்சியை நிரூபித்தது.

சிரியா மற்றும் லிபியாவில் உறுதியற்ற தன்மையை பயன்படுத்தி ரஷ்யா தன்னை ஒரு பிராந்திய பாதுகாப்பு உத்தரவாதமாக நிலைநிறுத்திக் கொண்டாலும், இஸ்ரேல் - ஈரான் போர் தீவிரமடைந்தால் அது போன்ற பலன்களைப் பெற முடியாது என்பதும் வெளிப்படை.

**உக்ரைன் போரில் தெஹ்ரான் உதவி:**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உக்ரைன் படையெடுப்பு தொடங்கியதில் இருந்து, ரஷ்யா ஈரானுடனான தனது கூட்டாண்மையை மேலும் ஆழப்படுத்தியுள்ளது. உக்ரைன் மீது படையெடுத்ததில் இருந்து அதிக பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை ஈரானிடமிருந்து ரஷ்யா பெறுகிறது.

மாஸ்கோவிற்கு ஆளில்லா வான்வழி அமைப்புகள், பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் போர் விமானங்களை ஈரான் வழங்கியது. ஈரான் ஒரு முக்கியமான இராணுவ விநியோகத்தை ரஷ்யாவுடன் செய்துள்ளது. இந்த ஈரானுடனான நெருக்கமான உறவு, சர்வதேச தடைகளைத் தாங்கும் ரஷ்யாவின் திறனையும் மேம்படுத்தியுள்ளது.

தெஹ்ரானுடன் மாஸ்கோவின் வளர்ந்து வரும் நட்பு, மத்திய கிழக்கில் ரஷ்ய செல்வாக்கு மேலும் வலுவாக வளர்ச்சி அடைவதைக் குறிக்கிறது. ஆனால் இப்பிராந்தியத்தில் அதன் எதிர்கால பங்கு பாரியளவில் ஈரானுக்கு ஆதரவாக இருக்கும் என்பதை ரஷ்யா உணர்த்துகிறது.

மத்திய கிழக்கில் மாஸ்கோ அதன் நீண்டகால மூலோபாய நோக்கங்களை அடைய, அது தெஹ்ரானுடன் நெருங்கிய இராணுவ பணி உறவை வளர்த்துக் கொள்ள முயற்சிக்கிறது.

ஏப்ரல் 1, 2024 அன்று சிரியாவின் டமாஸ்கஸில் உள்ள ஈரானிய தூதரகத்திற்கு அருகிலுள்ள கட்டிடத்தின் மீது இஸ்ரேலிய தாக்குதலை ரஷ்யா கடுமையாக கண்டித்துள்ளது. தற்போது ரஷ்யா-ஈரான் உறவின் பரிணாமம் இப்பகுதியில் ரஷ்யாவின் எதிர்கால நிரந்தர நிலைக்கான வெளிப்பாடாகும்.



**அஜர்பைஜான் அரசுடன் நட்பு:**

2015 ஆம் ஆண்டில் சிரியாவில் மாஸ்கோவின் ராணுவ நடவடிக்கைகள் தொடங்கியபோது, சர்வதேச பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பது தான் தங்கள் நோக்கம் என்று கிரெம்ளின் அரசு கூறியது. ஆனால் மத்திய கிழக்கில் ரஷ்யாவின் ஆதிக்கத்தை மீண்டும் உருவாக்குவது தான் முக்கியமான கருத்தாக இருந்தது என்பதே உண்மையாகும்.

கடந்த 2023 அக்டோபரில், போரில் அஜர்பைஜான் இராணுவப் படைகள் நாகோர்னோ-கராபக் என்ற இன ரீதியிலான ஆர்மேனியப் பகுதியைக் கைப்பற்றியதால், முன்னாள் நட்பு நாடான ஆர்மீனியாவின் சார்பாக ரஷ்யா தலையிடத் தவறியது.

ஆயினும் ரஷ்யா தந்திரோபாயமாகவே ஆர்மேனியாவை கழட்டி விட்டதாகவும் கருதப்படுகிறது. அஜர்பைஜானுக்கு ஆதரவான ரஷ்யாவின் செயற்பாடு, இஸ்லாமிய நாடுகளுக்கு ஆதரவான நிலையை ரஷ்யா எடுத்துள்ளது. மத்திய கிழக்கில் ஒருபுறம் இருக்க, சோவியத்திற்குப் பிந்தைய கால கட்டத்தில் அரபு நாடுகளில் ஒரு ஸ்திரப்படுத்தும் சக்தியாக செயல்பட ரஷ்யா முயல்கிறது.

# தமிழ்நாட்டில் தொகுதிகளை வெல்லும் அளவுக்கு பா.ஜ.க. வலுவடைந்திருக்கிறதா? களநிலவரம் என்ன?

சிவகுமார் இராஜகுலம்

“இந்தியாவின் மற்ற மாநிலங்களில் பூஜ்யத்தில் இருந்து நாங்கள் தொடங்கினோம் என்றால் தமிழ்நாட்டில் மைனசில் இருந்து தொடங்க வேண்டியிருந்தது.”

பா.ஜ.க-வின் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ்-இன் கூட்டங்களில் அதன் நிர்வாகிகள் அடிக்கடி உதிர்க்கும் வார்த்தைகள் இவை. பெரியாரின் சமூக நீதி, சாதி மறுப்பு, கடவுள் மறுப்புக் கொள்கைகள் தமிழ்நாட்டில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை குறிப்பிட்டே ஆர்.எஸ்.எஸ் நிர்வாகிகள் அவ்வாறு கூறுவார்கள்.

1960-களில் கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவிடம் அமைப்பதற்கான போராட்டம் மூலமாக தமிழ்நாட்டில் முதன் முதலாக ஆர்.எஸ்.எஸ். அறியப்பட்டது. அதன் பின்புலத்தில் இயங்கிய பா.ஜ.க-வுக்கு 1996-ஆம் ஆண்டு தான் முதல் எம்.எல்.ஏ. கிடைத்தார். 1998-ஆம் ஆண்டு அதிமுக-வுடன் கூட்டணி பா.ஜ.க.-வுக்கு முதல் திருப்பம் என்றால், 2014-ஆம் ஆண்டு இருபெரும் திராவிடக் கட்சிகளின் துணை இல்லாமலேயே ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றது அடுத்த மைல்கல்லாக அமைந்தது.

2014-ஆம் ஆண்டு மோடியை முன்னிறுத்தி திமுக, அதிமுக அல்லாத கூட்டணியை பா.ஜ.க. அமைத்தாலும், அந்தக் கூட்டணிக்கு அதிக இடங்களில் போட்டியிட்ட கட்சி என்ற வகையில் தேமுதிக-வே தலைமை வகித்தது. அடுத்த பத்தே ஆண்டுகளில் இருபெரும் திராவிடக் கட்சிகள் அல்லாத மூன்றாவது அணிக்கு தலைமை தாங்கும் இடத்தை பா.ஜ.க அடைந்துள்ளது.

பா.ஜ.க-வின் இந்த வளர்ச்சி எப்படி சாத்தியமானது? இது உண்மையிலேயே கள யதார்த்தத்தை பிரதிபலிக்கிறதா?

**திராவிடக் கட்சிகளின் கூட்டணியில் பா.ஜ.க**

தமிழ்நாட்டின் அரசியலில் குறிப்பிடும்படியான இடம் கிடைக்காமல் தவித்த பா.ஜ.க-வுக்கு 1996-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் முதன் முதலில் ஒரு எம்.எல்.ஏ. கிடைத்தார். தனித்தே போட்டியிட்டு வென்றதன் மூலம் மாநிலத்தில் பா.ஜ.க தன் இருப்பை வெளிக்காட்டியது. தமிழ்நாட்டில் பெரிதாக கண்டுகொள்ளப்படாமல் இருந்த பா.ஜ.க. மீது மற்ற கட்சிகளின் பார்வை பட்டது அப்போதுதான்.

பா.ஜ.க.வைப் பொருத்தவரை, 1998-ஆம் ஆண்டு தேர்தல் திருப்புமுனையாக அமைந்தது. இருபெரும் திராவிடக் கட்சிகளுக்கு அடுத்தபடியாக அதிக வாக்கு வங்கியுடன் வெற்றியைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் கட்சியாக கருதப்பட்ட காங்கிரஸ் (அல்லது அதன் வழிவந்த கட்சிகள்) பின்னடைவை சந்திக்க, பாஜக-வோ அடுத்தக்கட்டத்திற்கு நகர்ந்தது. 1996-ஆம் ஆண்டு பெருவெற்றியைப் பெற்ற திமுக - த.மா.கா கூட்டணி அந்த தேர்தலில் பின்தங்க, அதிமுக தலைமையில் பா.ம.க, பா.ஜ.க, மதிமுக ஆகிய கட்சிகளை உள்ளடக்கிய கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்றது. பாஜக-வையும், அதன் பிரதமர் வேட்பாளர் வாஜ்பேயியையும் தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் கொண்டு சேர்த்தது இந்தக் கூட்டணி.

மத்தியில் வாஜ்பேயி தலைமையில் அமைந்த கூட்டணி அரசு 13 மாதங்களில் ஆட்டம் காண, இப்போதைய பாஜக மூத்த தலைவரும், அப்போதைய ஜனதா கட்சித் தலைவருமான சுப்ரமணியன் சுவாமி நடத்திய தேநீர் விருந்தும், அதன் தொடர்ச்சியாக அதிமுக தனது ஆதரவை விலக்கிக் கொண்டதுமே காரணமாக அமைந்தன. அந்த வகையில், வாஜ்பேயி அரசுக்கு எதிரான நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை ஒட்டுமொத்த நாடும் உற்றுநோக்கியது. பாஜக கூட்டணியில் இருந்து அதிமுக வெளியேறியதால் ஏற்பட்ட வெற்றிடத்தை மற்றொரு திராவிடக் கட்சியான திமுக நிரப்பியதும் அதற்குக் காரணமாக அமைந்தது.

**ஒரே ஒரு வாக்கில் கவிழ்ந்த வாஜ்பேயி அரசு**

வாஜ்பேயி அரசு மீதான நம்பிக்கை இல்லா தீர்மானம் மீதான வாக்கெடுப்பு நள்ளிரவு தாண்டியும் தொடர, அதன் முடிவைத் தெரிந்து கொள்ள தமிழ்நாட்டில் வீடுகளிலும், பொதுத் தொலைக்காட்சிகளின் முன்பும் கடைசி வரை அமர்ந்திருந்தவர்கள் ஏராளம்.

சில நாட்கள் முன்பாக ஒடிஷா முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த காங்கிரசைச் சேர்ந்த கிரிதர் கமாங், தனது எம்.பி. பதவியிலும் தொடர்ந்ததால் வாக்களிக்க அவைக்கு வருகை தர, அவர் வாக்களிப்பதற்கு எதிராக சலசலப்புகள் எழுந்தன. ஆனாலும், கமாங் வாக்களிக்க ஒப்புக் கொண்ட அன்றைய பிரதமர் வாஜ்பேயி மீது மக்களுக்கு அனுதாபம் பிறந்தது. ஒரே ஒரு வாக்கில் வாஜ்பேயி அரசு கவிழ்ந்தது. ஒருவேளை, கிரிதர் கமாங் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை என்றால், வாக்குகள் சமநிலையை எட்டியிருக்கும் என்பதால், சபாநாயகரின் வாக்கு மூலம் அன்றைய வாஜ்பேயி அரசு நிலைத்திருக்கலாம்.

தமிழ்நாட்டில் அடுத்து வந்த நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களில் திமுக கூட்டணியில் பா.ஜ.க. இடம் பெற்றது. 2004-ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் நிலைமை மீண்டும் தலைகீழாக மாற, அதிமுக கூட்டணியில் பாஜக இடம் பெற்றது. அரசு ஊழியர், ஆசிரியர்கள் மற்றும் போக்குவரத்து தொழிலாளர்களின் போராட்டத்தை கையாண்ட விதம், கோவில்களில்



ஆடு-கோழி பலியிட தடைச் சட்டம், மத மாற்றத் தடைச் சட்டம் போன்ற சர்ச்சைக்குரிய சட்டங்கள் ஆகியவற்றுடன் பாஜக-வுடன் கூட்டணி அமைத்ததால் இழந்த சிறுபான்மை வாக்குகளும் அதிமுக அணியை அனைத்து தொகுதிகளிலும் படுதோல்வியடையச் செய்தது. இதனால், “பா.ஜ.க.வுடன் இனிமேல் ஒருபோதும் கூட்டணி அமைப்பதில்லை“ என்று அன்றைய முதல்வரும், அதிமுக பொதுச்செயலாளருமான ஜெயலலிதா சூளுரைத்தார்.

**நோட்டாவுடன் ஒப்பிட்டு பா.ஜ.க. மீது விமர்சனம்**

அதன் பின்னர் வந்த தேர்தல்களில் திமுக, அதிமுக போன்ற பெரிய கட்சிகளுடன் பாஜக-வால் கூட்டணி அமைக்க முடியவில்லை. இந்த காலகட்டத்தில் அறிமுகமான “நோட்டா“-வுக்கு (தேர்தலில் யாருக்கும் வாக்களிக்க விரும்பவில்லை) விழுந்த வாக்குகளின் எண்ணிக்கையைக் கூட சில இடங்களில் பா.ஜ.க-வால் தாண்ட முடியாமல் போக, “நோட்டாவைக் கூட தாண்ட முடியாத கட்சி“ என்று தமிழ்நாட்டின் அரசியல் மேடைகளில் விமர்சிக்கப்படும் அளவுக்கு தர்மசங்கடத்தையும் பா.ஜ.க சந்திக்க நேரிட்டது.

2014-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மோடியை முன்னிறுத்தி தமிழ்நாட்டில் ஒரு அணியை பா.ஜ.க முன்னின்று அமைத்தாலும், அதிக இடங்களில் போட்டியிட்டக் கட்சி என்ற வகையில் தேமுதிக-வே அந்த கூட்டணிக்குத் தலைமை தாங்கியது. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அதிமுக தனித்துக் களம் காண, “மோடியா அல்லது இந்த லேடியா“ என்ற கேள்வியை வாக்காளர்களிடம் முன்வைத்த ஜெயலலிதாவுக்கு பெருவெற்றி கிடைத்தது. நாடு முழுவதும் மோடி அலை வீச, தமிழ்நாட்டிலோ லேடி அலை வீசியிருந்ததை தேர்தல் முடிவு அம்பலப்படுத்தியது. அதிமுக 38 இடங்களை வெல்ல, பா.ஜ.க. கூட்டணிக்கு 2 இடங்களில் வெற்றி கிடைத்தது. திமுக-வுக்கு ஓரிடம் கூட கிடைக்கவில்லை.

மத்தியில் அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி, தமிழ்நாட்டில் ஓரிடத்தில் வெற்றி, ஒரு மத்திய அமைச்சர் என பா.ஜ.க-வுக்கு இருந்தாலும் கூட 2014-ஆம் ஆண்டுக்குப் பிறகும் தமிழ்நாட்டு அரசியலில் பெரிய பங்கு வகிக்கும் இடத்திற்கு அக்கட்சியால் வர முடியவில்லை. 2016-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் எந்த கூட்டணியிலும் இடம் பெறாத பாஜ.க-வுக்கு ஓரிடம் கூட கிடைக்கவில்லை.

2016-ஆம் ஆண்டில் பா.ஜ.க-வுக்கு திருப்புமுனை

இருபெரும் திராவிடக் கட்சிகளின் தயவில்லாமல் 1996-இல் முதல் எம்.எல்.ஏ., 2014-ஆம் ஆண்டு ஒரு எம்.பி. கிடைத்தாலும் கூட, 2016-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் ஓரிடத்தைக் கூட வெல்லாத பா.ஜ.க தமிழ்நாட்டு அரசியலில் பெரிய பாத்திரத்தை வகிக்க முடியாமலேயே இருந்தது.

ஆனாலும், அதே ஆண்டுதான் தமிழ்நாட்டில் பா.ஜ.க-வுக்கு திருப்புமுனையாகவும் அமைந்தது. தேர்தலில் வென்று மீண்டும் முதலமைச்சரான சில மாதங்களிலேயே ஜெயலலிதா உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிறகு, தமிழ்நாட்டு அரசியலில் பா.ஜ.க-வின் ஒவ்வொரு நகர்வும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாக மாறியது.

ஜெயலலிதா சிகிச்சை பெற்ற சென்னை அப்பல்லோ மருத்துவமனைக்கு அன்றைய மத்திய அமைச்சரான வெங்கையா நாயுடு நேரடியாக வருகை தந்தார். அதன் பிறகு மாநில அரசிலும், அதிமுக கட்சிக்குள்ளும் நடந்த ஒவ்வொரு நகர்வின் பின்னணியிலும் பாஜக இருப்பதாக தொடர்ச்சியாக விமர்சிக்கப்பட்டது. ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அதிமுக-வில் ஏற்பட்ட வெற்றிடத்தைத் தனக்கான வாய்ப்பாக பா.ஜ.க பயன்படுத்திக் கொண்டது என்றே அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

**பா.ஜ.க-வின் “தனி ஆவர்த்தனம்”**

2021-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அதிமுக - பா.ஜ.க கூட்டணி தோல்வியடைந்ததுமே பா.ஜ.க “தனி ஆவர்த்தனம்” செய்யத் துவங்கிவிட்டது. மாநில பா.ஜ.க தலைவராக அண்ணாமலை நியமிக்கப்பட்ட பிறகு அக்கட்சி மாநிலத்தில் ஆளுங்கட்சியான திமுக மீதான விமர்சனங்களை கூர்மைப்படுத்தியது. அடுக்கடுக்காக ஊழல் புகார்கள், முறைகேடு குற்றச்சாட்டுகள் என்று ஊடகங்களில் அண்ணாமலை எப்போதும் பேசுபடு பொருளாகவே இருந்தார்.

அதேநேரத்தில், பிரதான எதிர்க்கட்சியான அதிமுக-வில் எடப்பாடி பழனிசாமி - ஓ.பன்னீர்செல்வம் ஆகிய இருவருக்குள்ளும் பனிப்போர் நடந்து கொண்டிருந்தது. அதன் உச்சக்கட்டமாக ஓ.பி.எஸ் வெளியேற்றப்பட, எடப்பாடி பழனிசாமி அக்கட்சியின் ஒற்றைத் தலைமையாக உருவெடுத்திருந்தார். அதிமுக உள்கட்சிப் பிரச்னையால் திணறிக் கொண்டிருந்த வேளையில், திமுக-வுக்கு எதிரான அரசியலை பா.ஜ.க முனைப்புடன் செயல்படுத்தியது.

தேசிய அளவில் பா.ஜ.க-வுடன் அதிமுக இணக்கமாக இருந்தாலும், சட்டமன்றத் தேர்தலை அடுத்து வந்த உள்ளாட்சித் தேர்தலில் பா.ஜ.க தனித்தே களம் கண்டது. மாநகராட்சிகளில் பெரிய அளவில் வெற்றி கிடைக்கவில்லை என்றாலும் கூட, நகராட்சி, மாவட்ட ஊராட்சி, ஒன்றிய அளவில் ஓரளவுக்கு பா.ஜ.க ஆதரவாளர்கள் தேர்வாயினர். திமுக மட்டுமின்றி, ஒரு கட்டத்தில் அதிமுக-வையும் பா.ஜ.க மாநிலத் தலைவர் அண்ணாமலை விமர்சிக்கத் தொடங்கினார். குறிப்பாக ஜெயலலிதா குறித்த அவரது பேச்சு அதிமுக - பாஜக கூட்டணி முறிவுக்கு காரணமாக அமைந்தது. திமுக, அதிமுக அல்லாத வலுவான மூன்றாவது அணியை அமைப்பதில் பா.ஜ.க முனைப்பு காட்டியது. பாமக-வை கூட்டணியில் இணைத்துக் கொண்ட பா.ஜ.க, சரத்குமாரின் சமத்துவ மக்கள் கட்சியை தனக்குள்ளேயே கரைத்துக்கொண்டது.

நடப்பு நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க தனது முழு பலத்தையும் திரட்டி போட்டியிடுகிறது. ஆளுநராக இருந்த தமிழிசை சவுந்தரராஜன், தற்போது மத்திய அமைச்சராகவும், எம்.பி-யாகவும் உள்ள எல்.முருகன், தற்போதைய எம்.எல்.ஏ. நயினார் நாகேந்திரன், முன்னாள் மத்திய அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன், பா.ஜ.க மாநிலத் தலைவர் அண்ணாமலை, அண்மையில் கட்சியில் இணைந்த ராதிகா சரத்குமார் என்று தமிழ்நாடு முழுவதுமே தான் போட்டியிடும் தொகுதிகளில் மக்களுக்கு நன்கு பரிச்சயமான முகங்களையே பா.ஜ.க நிறுத்தியுள்ளது.

கூட்டணியில் சேர்ந்த பாரிவேந்தர், ஏ.சி.சண்முகம் ஆகியோரும் கூட தாமரை சின்னத்தில்தான் போட்டியிடுகின்றனர். ஓ.பன்னீர்செல்வம், டிடிவி தினகரன் ஆகியோரும் பா.ஜ.க கூட்டணியில் போட்டியிடுகின்றனர்.

**மிகப்பெரிய இலக்கை நிர்ணயித்துள்ள பா.ஜ.க**

இந்தி பேசும் உத்தரபிரதேசம், பிகார், டெல்லி, ராஜஸ்தான், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களிலும், மேற்கே மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்களிலும் 2014, 2019 ஆகிய நாடாளுமன்ற தேர்தல்களில் பா.ஜ.க உச்சபட்ச வெற்றியை பதிவு செய்துள்ளது. அதே உச்சபட்ச அதாவது, 90 வீதத்துக்கும் அதிகமான தொகுதிகளை வென்றெடுப்பது மீண்டும் சாத்தியமா என்ற கேள்வி நிலவும் சூழலில், பா.ஜ.க-வோ தனது இலக்கை 370 தொகுதிகள் என்று விரிவுபடுத்தியுள்ளது. அதனை உறுதி செய்ய இந்தி பேசும் மாநிலங்களுடன், பாஜக கடந்த முறை சோபிக்காத தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட மாநிலங்களிலும் சில தொகுதிகளை வெல்ல வேண்டும் என்று அக்கட்சி முனைப்பு காட்டுகிறது.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை, பிரதமர் மோடி முன்னெப்போதும் இல்லாத வகையில் மிக குறுகிய இடைவெளியில் அடுத்தடுத்து வந்து தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பங்கேற்றுள்ளார். பா.ஜ.க சார்பில் மத்திய அமைச்சர்களும் வந்து பிரசாரத்தை முடுக்கி விட்டுள்ளனர்.

கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக திட்டமிட்டு அடிமட்டத்தில் உழைத்துக் கொண்டிருக்கும் பா.ஜ.க இம்முறை கண்டிப்பாக சிறப்பான வெற்றியை ஈட்டும் என்று அக்கட்சியின் மாநிலத் துணைத் தலைவர் கரு. நாகராஜன் தெரிவித்துள்ளார்.

“தமிழ்நாட்டில் கூட்டணிக்கு பா.ஜ.க தலைமை ஏற்று இருக்கிறது என்பதை காட்டிலும் மோடி மீண்டும் பிரதமராக வரவேண்டும் என்ற ஒத்த கருத்துடைய கட்சிகளை ஒரே கூட்டணியில் இணைத்து இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பா.ஜ.க தலைமை ஏற்று இருக்கிறது. மோடி பிரதமராக நீடிக்க வேண்டும் என்பதே எங்கள் கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகளின் எண்ணமாக இருக்கிறது,” என்றார்.

**அண்ணாமலையின் அணுகுமுறை எப்படி?**

பா.ஜ.க மாநிலத் தலைவர் அண்ணாமலையின் அணுகுமுறை பற்றி கேட்ட போது, “அண்ணாமலை அவர் போட்டியிடும் கோவை தொகுதி மட்டுமல்லாமல் தமிழ்நாடு முழுவதுமே கூட்டணியின் வெற்றிக்காக உழைக்கிறார். ஒரு நாள் முழுவதும் கட்சி நிர்வாகிகளையும் கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளையும் தொடர்ச்சியாக சந்திக்கிறார். தேர்தல் வெற்றிக்கான ஆலோசனைகளை வழங்குகிறார். கூட்டணி கட்சிகளை கையாள்வதை பொருத்தவரை அண்ணாமலை மிகச் சிறப்பாக செயல்படுகிறார்,” என்றார்.

“கோவையில் பாமக-வினர் மனக்கசப்பால் சிறு சலசலப்பு ஏற்பட்டதாக ஊடகங்களில் மட்டுமே

(மறுபக்கம் பார்க்க)

பேசப்படுகிறது. உண்மையில் களத்தில் அப்படி எதுவும் நடக்கவில்லை. பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் மற்றும் அக்கட்சி தலைவர்கள் பலரும் அங்கே பிரசாரம் செய்துள்ளனர். தமிழ்நாடு முழுவதும் அனைத்து இடங்களிலும் கூட்டணி கட்சிகள் ஒன்றுபட்டு செயல்படுகின்றன. அண்ணாமலை பா.ஜ.க நிர்வாகிகள், கூட்டணி கடசியினர் என அனைவரையும் அரவணைத்து செல்கிறார். மிகவும் பக்குவப்பட்ட தலைவராக இருக்கிறார்," என்று கரு.நாகராஜன் தெரிவித்தார்.

**"தமிழ்நாட்டில் பா.ஜ.க-வே பிரதான எதிர்க்கட்சி"**

அத்துடன், "தமிழ்நாட்டில் சித்தாந்த ரீதியாக மட்டுமின்றி களத்திலும் திமுக-வுக்கு நாங்களே எதிர்க்கட்சியாக செயல்பட்டு வருகிறோம். மாநிலத்தில் ஆளும் திமுக-வின் ஊழல்களையும் முறைகேடுகளையும் அதிகார துஷ்பிரயோகங்களையும் பாரதிய ஜனதா கட்சி தான் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறது. திமுக-வின் முறைகேடுகளை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பது பா.ஜ.க தான். ஆகவே இன்று தமிழ்நாட்டில் பா.ஜ.க தான் திமுக-வுக்கு பிரதான எதிர்க்கட்சியாக களத்தில் நிற்கிறது. மக்கள் யாரை நினைக்கிறார்களோ அவர்கள் தானே பிரதான கட்சி. ஆகவே, மோடி பிரதமராக வேண்டும் என்று தமிழ்நாட்டின் பெருவாரியான மக்கள் நினைப்பதால் பாஜகதான் அந்த இடத்தில் இருக்கிறது," என்றார்.

"திமுக, அதிமுக-வுக்கு நிகராக பா.ஜ.க-வும் தமிழ்நாடு முழுவதும் பெருநகரம் முதல் கிராமங்கள் வரை அனைத்து இடங்களிலும் உள் கட்டமைப்பை வலுப்படுத்தி உள்ளது. கடந்த உள்ளாட்சி தேர்தலில் நாங்கள் தனித்துப் போட்டியிட்ட போதே தமிழ்நாடு முழுவதும் வாக்குச்சாவடி வாரியாக பூத் கமிட்டிகளை அமைத்து விட்டோம். தமிழ்நாட்டில் பா.ஜ.க-வுக்கு கிராமப்புற, நகர்ப்புற, பெருநகர அளவில் ஏற்கனவே நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு அமைப்பு ரீதியாக கட்சி வலுவாக இருக்கிறது. இந்தத் தேர்தலில் மோடி மீண்டும் பிரதமராக வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் ஒன்றிணைந்துள்ள கூட்டணி கட்சிகளும் எங்கள் நிலையை இன்னும் வலுப்படுத்தி உள்ளன. ஆகவே இந்த தேர்தலில் திமுக-வுக்கு பா.ஜ.க தான் சவால் விடும் கட்சியாக களத்தில் இருக்கிறது. மக்கள் ஆதரவுடன் பா.ஜ.க கூட்டணி சிறப்பான வெற்றியைப் பெறும்," என்றும் கரு.நாகராஜன் கூறினார்.

**"மலை எங்கே மடு எங்கே" - ஜெயக்குமார் விமர்சனம்**

தமிழ்நாட்டில் பிரதான எதிர்க்கட்சியாக மக்கள் மன்றத்தில் நாங்களே செயல்படுகிறோம் என்ற பா.ஜ.க-வினரின் பேச்சு குறித்து அதிமுக முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமாரிடம் வினவினோம். அவர் பேசுகையில், "பா.ஜ.க-வினரின் பேச்சு வெறும் பேச்சு, வெட்டிப் பேச்சு. திட்டமிட்டு கோயபல்ஸ் பொய் பிரசாரத்தை அவர்கள் பரப்பி விடுகிறார்கள். மலை எங்கே மடு எங்கே? அதிமுக இமயமலை. மற்ற கட்சிகளுடன் எங்களை ஒப்பிட முடியாது. நான் ஏற்கனவே கூறியது போல பா.ஜ.க-வினரின் பேச்சுகள் வெறும் பேச்சு வெட்டிப் பேச்சுதான்," என்று விமர்சித்தார்.

கூட்டணி அமைப்பதில் அதிமுகவை பா.ஜ.க முந்தி விட்டதா என்ற கேள்விக்கு, "அதிமுக தனித்தன்மை கொண்ட கட்சி, கூட்டணி இல்லாமல் நாங்கள் வெற்றி பெற்ற வரலாறு உண்டு. திமுக எப்போதும் கூட்டணியுடன்தான் இருக்கும். ஆரம்ப காலம் முதல் யார் மீதாவது சவாரி செய்வார்கள். அல்லது யாராவது அவர்கள் மீது சவாரி செய்வார்கள். கூட்டணி இல்லாமல் தங்களால் வெல்ல முடியாது என்று திமுக-வுக்கே தெரியும். ஆனால், அதிமுக-வைப் பொருத்தவரை, கூட்டணி இல்லாமலேயே வெற்றி பெற்றிருக்கிறோம். எங்களுடன் கூட்டணி சேரும் கட்சிகளுக்கு தேர்தல் ஆணைய அங்கீகாரம், கூடுதல் சீட்களில் வெற்றி போன்றவற்றை பெற்றுக் கொடுத்திருக்கிறோம்," என்றார்.

"எங்களுக்கென்று தனிப்பட்ட பலம் உள்ளது. எங்களுடன் சேரும் போது கூட்டணிக் கட்சிகள் பலம் பெறுகின்றன. அவர்கள் வராவிட்டால் நாங்கள் அதைப் பற்றி பொருட்படுத்துவதில்லை. அதனால் நாங்கள் என்றுமே வீழ்ந்ததில்லை. எங்களுக்கென்று தனித்தன்மை வாய்ந்த அடையாளம் இருப்பதால் நாங்கள் கூட்டணியை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்வதில்லை. ஆனால், பா.ஜ.க-வைப் பொருத்தவரை, 10 பேரை சேர்த்துக் கொள்கிறார்கள். ஆனால், ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது போல அது நடைமுறைக்கு ஒத்துவராது. ஆகவே, அதிமுகடன் பாஜகவை எந்த வகையிலும் ஒப்பிடவே முடியாது," என்று ஜெயக்குமார் பதிலளித்தார்.

**ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அதிமுக-வை பா.ஜ.க ஆட்டுவித்ததா?**

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு அதிமுகவை பா.ஜ.க ஆட்டுவித்ததாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகிறதே என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர், "அதிமுக யாருடைய அழுத்தத்திற்கும் அடிபணிந்தது இல்லை. எங்களைப் பொருத்தவரை, மாநில நலன்களுக்காக தோழமையுடன் இருந்தோம். ஆனால் தமிழ்நாட்டின் நலன் பாதிக்கப்படும் வகையில் மத்திய அரசு மக்கள் விரோத போக்கை கடைபிடிக்கும் போது, திமுக-வைப் போல நாங்கள் மௌனமாக இருந்துவிடவில்லை," என்றார்.

"குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் காவிரி நதி நீர்ப் பிரச்னையை எடுத்துக் கொள்ளுங்கள். அதற்காக நாடாளுமன்றத்தையே ஸ்தம்பிக்க வைத்தோம். மத்திய அரசுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுத்தோம். தமிழ்நாட்டின் உரிமையை எங்கும் விட்டுக் கொடுக்காமல் தனித்தன்மையுடன் இருந்துள்ளோம். அதிமுக-வை பலவீனப்படுத்துவதற்காக திட்டமிட்டு செய்யப்படுகின்ற கோயபல்ஸ் பரப்புரைதான் இது. ஒரு பொய்யை திரும்பத் திரும்ப சொன்னால் உண்மையாகி விடாது. இதுபோன்ற பிரசாரங்களை எல்லாம் தாண்டி அதிமுக வெற்றி பெறும்," என்று தெரிவித்தார்.

**"தேர்தலுக்குப் பிறகு அதிமுக-வில் மீண்டும் குழப்பம் வரும்"**

அதிமுக - பா.ஜ.க உறவு குறித்துப் பேசிய மூத்த பத்திரிகையாளர் கார்த்திகேயன், "பா.ஜ.க-வுடன் எடப்பாடி பழனிசாமி கூட்டணியை முறித்துக் கொண்டதற்கு ஜெயலலிதா குறித்த அண்ணாமலையின் பேச்சு மட்டுமே காரணம் அல்ல. உண்மையான காரணம் 2026-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பா.ஜ.க தலைமையில் ஆட்சி என்ற அண்ணாமலையின் முழக்கம் தான் அதற்கு காரணம். அந்த முழக்கம், "தான் முதலமைச்சராக வேண்டும்" என்ற எண்ணத்திற்கு எதிரானது என்பதால் தான் எடப்பாடி பழனிசாமியால் அதனை ஏற்க முடியவில்லை அதனால் தான் அவர் பாஜகவுடன் கூட்டணியை முறித்துக் கொண்டார்

"இன்று பா.ஜ.க-வுடன் கூட்டணி வைத்துக் கொண்டுள்ள தினகரன் 2026-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும் என்று கூறுகிறார். அதிமுக-வை வசமாக்கி அதன் மூலம் அம்மா ஆட்சி அல்லது அமமுக ஆட்சி என்று கூட தினகரன் பேசவில்லை. அப்படி என்றால் என்ன அர்த்தம்? ஆட்சியில் பா.ஜக-வும் பங்கேற்கும் என்று தானே அர்த்தம், இதன் பின்னணியில் ஏதோ ஒன்று மறைந்திருக்கிறது.

"அதாவது நடப்பு நாடாளுமன்ற தேர்தலுக்குப் பிறகு ஒருவேளை மத்தியில் மீண்டும் பா.ஜ.க ஆட்சி அமைந்தால், தமிழ்நாட்டில் எடப்பாடி பழனிசாமிக்கு பிரச்னைகள் உருவாகலாம். அதிமுக-வில் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக அதிருப்திக் குழுக்கள் உருவாகி, போர்க்கொடி தூக்கலாம். அதிமுக மீண்டும் ஓபிஎஸ்-தினகரன் வசமாகலாம். அனுசரனையான அவர்களை பக்கத்தில் வைத்துக்கொண்டு அதிமுகவின் உள்கட்டமைப்பை பயன்படுத்திக்கொண்டு 2026-இல் தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணி என்ற போர்வையில் பா.ஜ.க ஆட்சியில் பங்கெடுக்க விரும்புகிறது. அப்படி நடக்கும் பட்சத்தில், மோடி பிரதமராக வேண்டி தங்கத் தேர் இழுத்த ஓபிஎஸ தடையாக இருக்கவா போகிறார்?" என்றார்.

நடப்பு நாடாளுமன்ற தேர்தலைப் பொருத்தவரை, தமிழ்நாட்டில் பா.ஜ.க-வால் ஓரிடத்தில் கூட வெல்ல முடியாது என்பது அவரது கணிப்பு. தமிழ்நாட்டில் பா.ஜ.க வலுப்பெற்றிருக்கிறது என்ற அக்கட்சியினரின் கூற்றை ஏற்றுக் கொண்ட பத்திரிகையாளர் கார்த்திகேயன், அது அந்த கட்சி வெற்றி பெறும் அளவுக்கான வாக்குகளை பெற்றுத் தராது என்றார்.

"தமிழ்நாட்டில் அக்கட்சி ஓரிரு இடங்களில் இரண்டாவது இடத்திற்கு வரலாம். 2014-ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலிலும் கூட அது நடக்கவே செய்தது. இந்த முறை பா.ஜ.க சில இடங்களில் இரண்டாவது இடம் பிடிக்க அக்கட்சியின் பலம் மட்டுமின்றி, அதிமுக சார்பில் பலவீனமான வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டிருப்பதும் காரணமாக இருக்கும்," என்றார். ●

